மனோரஞ்ஜி
நல்லட்டாள்

V2
N23
221080

உ

நாதன் சரித்திர ஆராய்ச்சிமாலை—மலர்-௧.

---

# ராணிமங்கம்மாள்

[பாண்டிய நாட்டுப் பழஞ்சரித ஆராய்ச்சியுடன்]

3 - JAN 1924

மதுரை
ராஷ்டிர உயர்தர கலாசாலைத் தலைமைத்தமிழாசிரியரும்,
க்குமிராமகோவை' மணியாசிரியரும் ஆகிய,

திருத்தகு. பு. சிதம்பர
னவன நாத முதலியார் அவர்கள்
எழுதியது.

---

மதுரை—புத்தகவியாபாரம்
ா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்
வெளியிட்டது.

---

நூலுரிமை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

1923.

30154 3920



# ஆக்கியோன் முன்னுரை.

நமது நாட்டின் பெருமையை விளக்குவன, நாட்டை ஆண்டுள்ள மன்னர்களின் வரலாறும் அவர்கள் ஆண்டகாலத்தில் ஏற்படுத்திய தருமச்செயல்களுமாகும். பண்டைய மன்னர் வரலாறு முதலியன நந்நாட்டில் பண்டைக்காலத்தில் அவரவர்கள் அளித்த கல்வெட்டு ஆதாரங்களிலிருந்தும், நாட்டில் வழங்கும்மொழிகளில் அமைந்திருக்கும் உயர்தரக் காவியங்களிலிருந்தும் உணரப்படும். அச்சியந்திரசாலை ஏற்பட்டு மக்களின் கருத்துக்கள், புத்தகங்கள் பத்திரிகைகள் மூலமாக வெளியிடப்பெறச் சௌகரியங்கள் ஏற்பட்டது முதல்பிறநாட்டாரும் அரசியல்வரலாறுமுதலியவற்றைத் தாம் அறிந்த அளவில் எழுதிவெளியிடலானார்கள். இப்படி எழுதப்படும் சரித்திரக்குறிப்புகள்யாவும் நாட்டின் நடையுடைபாவனை யுணர்ந்து எழுதப்பட்டவையுமாகா. ஆகவே மேற்குறித்த மு... யில் வெளிவந்துள்ள சரித்திரங்களை யாராய்ந்து உண்மை... வாற்றைக் கதைநடையில் வெளியிடுதல் உண்மையுண... கடனாம் இக்கடமையைக் கைக்கொள்ள முற்பட்ட ந... ஆராய்ச்சி செய்ய முற்பட்டு, இப்பொழுது, மங்கம்மாள் ... தை ஒருவாறு யுக்திக்கும் புத்திக்கும் பொருத்தமாக எழுதிமு... தனம் இதைப்போன்று தென்னிந்திய மன்னர்களின் வரலாறு காளடைவில் ஒன்றன்பின் ஒன்றாய் வெளியிடப்பெறும.

ஆரம்பப்பள்ளிக்கூடத்தில் படித்துவரும் மாணவச் சிறுவர் சிறுமியர்களும் வாசித்துணருமாறு எளியநடையில் எழுதப்பட்டிருக்கும் இச்சரித்திர நூலைக் கல்வியிலாகாத்தலைவரும, ஜில்லாக் கல்விச் சங்கத்தாரும், கலாசாலையதிகாரிகளும் பாடப்புத்தகமாக அமைத்து, எமது நூல்களை வெளிப்படுத்தி யாதரித்து வரும் மதுரைப் புத்தக வியாபாரம் ஸ்ரீ பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ் ஏஜண்டு திரு மூ. கிருஷ்ண பிள்ளை அவர்களையும எமமையுந் ஊக்குவிக்குமாறு வேண்டுகிறேம.

...கம், மதுரை
...—9—23

பு. சி. புன்னைவனநாதன்,
இலக்குமிராமகோவையாசிரியன்.

உ

# மகாராணி மங்கம்மாள்

## முதல் அதிகாரம்.

### பாண்டிய நாட்டின் பழஅரசர்கள்.

நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்துவரும் நாடு இந்தியா. இது ஓர் தீபகற்பம். இது ஆசியாக்கண்டத்தின் தீபகற்பங்கள் மூன்றில் ஒன்று. இதன் விஸ்தீரணத்தையும் நாட்டின் பிரிவினையையும் உத்தேசித்து நமது முன்னோர்கள் இதனைப் பரதகண்டம் என்ற புண்ணியப் பெயரால் அழைக்கலானார்கள். பூமகளுக்குத் திருமுகம் என்று புகழப்படும் நமது இந்தியாவின் மத்தியில் விந்தியமலை என்ற ஓர் மலை இருக்கிறது. இம்மலைக்கு வடபக்கத்தில் உள்ளது வடஇந்தியா; தென் பக்கத்தில் உள்ளது தென் இந்தியா. தென் இந்தியாவில் வசித்துவந்த பழங்குடிகள் திராவிடர்கள். திராவிடமொழியைப் பேசுகிற ஜனங்கள் திராவிடர்கள். திராவிடமொழிகள் ஐந்து. இவற்றில் தலை சிறந்தது தமிழ்மொழி. இது இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவைக் கொண்டது. முதல் இடை கடை என்னும் மூன்று சங்கங்களால் வளர்க்கப் பெற்றது. இச்சங்கங்கள் கடலுள் அமிழ்ந்துள்ள தென் மதுரை, கபாடபுரம், இப்பொழுதைய மதுரை ஆகிய மூன்

றிடங்களிலும் முறையே நிலைத்திருந்தன. இவற்றின் தலைவர்களாகச் சிவபெருமான், குமரவேள் ஆகிய தெய்வங்களும் சிறந்துள்ளன. இத்தகைய தமிழ்மொழி; கன்னடம், தெலுங்கு மலையாளம், துளு ஆகிய மற்றத் திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி யென்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. திராவிடர்கள் அறிவு, நாகரிகம், கைத்தொழில், கப்பல்வாணிபம், ஆளுமுறை முதலியவற்றில் விசேஷமானவர்கள். திராவிட மன்னர்களில் முக்கிய மானவர்கள் சேர, பாண்டிய சோழ மன்னர்கள், சேரர்கள் மேற்கும் கிழக்கும் உள்ளபாகத்தையும், பாண்டியர்கள் தென்பிரிவையும், சோழர்கள் வடக்கும் கிழக்கும் உள்ள பிரிவையும் ஆண்டு வந்தார்கள். சரித்திர ஆசிரியர்கள் சேரமன்னர்களில் 50-பேரும், சோழமன்னர்களில் 66-பேரும் அரசாண்டதாகக் குறிப்பிட்டுடியலர்களன்றி, பாண்டிய மன்னர்களில் இத்தனைபேர் ஆண்டார்கள் என்று காட்டவுங் கூடாதவர்கள் ஆகின்றார்கள். வடஇந்தியாவை மௌரியரயினர் கி-மு 325 முதல் 188வரை ஆண்டுவந்த காலத்திலும், தென் இந்தியாவில் தமிழ் மூவேந்தரும் அரசாட்சி செய்துள்ளார்கள்.

தென்னிந்தியா மகாபலிகுலமரபினர், கடம்பர்கள், பல்லவர்கள், சளுக்கியர்கள், காலசூரியர்கள் முதலியவர்களால் ஆளப்பட்டு வந்தபின், 11-வது நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய ஒய்சாலவல்லாளர் கடம்பர்களையும் காலசூரிகளையும் வென்றபின், மேலச்சளுக்கியர் கீழச்சளுக்கியர் நாடுகளையும் கைக்கொண்டனர். 1222ல் ஒய்சாலர்தலைவன் 2வது நரசிம்மன் பல்லவர்கள் தலைவன் பெருஞ்சிங்கத்தேவன் வசமிருந்த சோழநாட்டைச் சேர்த்துக்கொள்ளமுயற்சித்தான். ஆனால், வடபக்கத்தில் யாதவமன்னர் நெருக்கி ஒய்சாலருக்

குச் சொந்தமானமாகாணங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். 3வதுராஜராஜச்சோழன் சோழநாட்டை ஆண்டுவந்தகாலத்தில் 1-வது ஜடாவர்ம சுந்தரபாண்டியன் படையெடுத்துச் சோழநாட்டிற் பெரும்பாகத்தைக் கைக்கொண்டு ஸ்ரீரங்கம் சென்று அரங்கநாதர்கோவில் விமானத்தைத் தங்கமூலாம் பூசி வைத்ததாக மேற்படி கோவில்மதில்களில் எழுதிவைக்கப்பட்டுள்ளது. பெருஞ்சிங்கத் தேவனும் சில பாகத்தைக் கைப்பற்றினான். சோழனுக்கு உதவிபுரிந்த ஒய்சாலமன்னன் வீரசோமேஸ்வரன் திருச்சிக்கு வடக்கில் கண்ணனூர் என்னும் விக்ரமபுரியைப்பெற்று ஆண்டுவந்தனன். ஜடாவர்மசுந்தரபாண்டியனுக்குப்பின் ஆண்டவன் 2-வதுமாறவர்மசுந்தர பாண்டியன். இவன் சாசனங்களில் 1-வது மாறவர்மகுலசேகரன் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றான், புறமலைநாட்டுத் திருக்கலக்குடிச் சிவதர்மீஸ்வரன்கோவில் சாசன மொன்றினல் இம்மன்னன் 1268-முதல் 1312-வரை ஆண்டவன் என்று தெரிகிறது. இக்காலத்தில் டெல்லியில் சக்கரவர்த்தியாக விளங்கியவன் அலாவுதீன்கில்ஜி. இவன் குஜாத் நாட்டை எதிர்த்தபொழுது அந் நாட்டரசன் உயிர் தப்பி ஓட, அவன் மனைவியைத் தன்மனைவியாக்கிக் கொண்டான். அந்நாட்டிலிருந்து சிறைபிடித்து வரப்பட்ட இந்து அடிமையை மாலிக்காபர் என்ற பெயருடன் தனது தளகர்த்தனாக உயர்த்தினன். வட இந்தியாவில் தனக்குக் கிடைத்த வெற்றியில் கருவமடைந்த அலாவுதீன், அகில இந்தியாவையும்தனக்குக் கீழாக்கி ஆள ஆசைகொண்டான். தனது நோக்கத்தை நிறைவேற்ற மாலிக்காபரைப் படையெடுத்துப் போகத்தூண்டினன். மாலிக்காபர் 1309ல் வாரங்காலைச் சேர்ப்பித்தபின், துவாரசமுத்திரத்தைக் கைக்கொண்டு, ஒய்சாலரைத்தாக்கி

விட்டு, மலபார்ப்பிரதேசங்களுக்குச்சென்று,நகரங்களைப்பாழ்
படுத்தினன். அங்கிருந்துபாண்டியநாட்டின்மீதுகண்ணாய்வந்
தவன், இடையிலுள்ளசீமைகளிலிருக்கும் சிவாலயம்விஷ்ணு
வாலயம் முதலிய புண்ணியஸ்தலங்களை இடித்துக் கொள்ளை
யடித்து வருவதுணர்ந்த பாண்டியன் பயந்து ஓடினான் என்
றும், கோவில் ஸ்தானிகர்கள் கர்ப்பக்கிருகத்தில் கிளிக்கூடு
செய்து மண்மேடுபோட்டுக் கல்வரிதிர்த்து வேறுமூர்த்தியை
அருத்தமண்டபத்திற் பிரதிட்டைசெய்வித்து நாஞ்சினாட்டுக்
காட்டுக்கு ஓடிவிட்டார்கள் என்றும் தெரிகின்றன. மாலிக்
காபர் படைகள் பாண்டியன் கோட்டையையும் கோவிலின்
அநேக பாகங்களையும் 14-கோபுரங்களையும தகர்த்துப்
பாழாக்கின. மாலிக்காபருக்கு விளக்கப்பட்ட திருவருட்
செயலால் பாழாக்கப்படாது மிஞ்சிய பகுதிகளை அதாவது
கர்ப்பக்கிருகமுதல் கபாலியுடையவர் திருமதில்வரை கெடுக்
கப்படாது காக்கப்பட்டன. மாலிக்காபர் தென்னாட்டு வெற்
றிச்சின்னமாக இராமேஸ்வரத்தில் ஓர் பள்ளிவாசலைக் கட்டு
வித்து, டெல்லிசென்றபொழுது 3000000பவுன்மதிப்புள்ள
கொள்ளைப் பொருள் கொண்டு போனதாகச் சொல்லப்படு
கிறது. தென்னாட்டுக் குழப்பநிலையைக்கண்ட கொல்லத்தர
சன் ரவிவர்ம குலசேகரன் பாண்டியநாடு சோழநாடுகளின்
மீது படையெடுத்துக் காஞ்சிபுரம் வரை வென்று, தனது
வெற்றிக்கொடியை நாட்டினன். 1316ல் கணபதியரசன்
2-வது பிரதாபருத்திரன் சோழ நாட்டின்மீது படையெடுத்
துக் காஞ்சினகரைக் கப்பங்கட்டும்படி செய்தான்.

வடஇந்தியாவில் அலாவுதீனின் செல்வாக்குக்குறையச்
சித்தூர், குஜராத் சுயாதீனமடைந்தன. 1316ல் அலாவுதீன்

இறந்ததும், நாடு ஆளுவோனின்றித் தத்தளித்தகாலத்தில் மாலிக்காபர் சிம்மாசனம் ஏறினன். ஆப்கானியர் தூண்டுதலின்பேரில், மலபார்ப்பிரதேசத்தினின்று திரும்பிய குசுருக்கான் மாலிக்காபரைக்கொன்று, அலாவுதீன் மகன் முபாரக்கைச் சிம்மாசனத்தில் இருத்தினன். இக்காலத்தில் அரசாங்கத்தை மேற்பார்த்து வந்த குசுருக்கான் அலாவுதீன் வம்சத்தை அழித்துத்தானே சிம்மாசனமேறினன். ஆனால் பஞ்சாப் கவர்னராயிருந்த கியாசுதீன் தக்ளக் குசுருக்கானுக்கு விரோதமாகக் கிளம்பி, அவனைக்கொன்று 1320ல் தக்ளக்வம்சத் தலைவனாக டெல்லியில் சிம்மாசனமேறினன். இவன் காலத்தில் தக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் இந்து அரசர்கள் தத்தம் பகுதிகளை அரசாண்டு வந்தார்கள். 1325ல் பட்டத்துக்கு வந்த மகமது பின் தக்ளக் வீண் படையெடுப்புகளில் பொருளைச் செலவழித்தான். வங்காளம் போன்றவை கலகமிட்டுச் சுயாதீனமடைந்தன. தனது சகோதரன் மகன் பகாஉதீன் குஷ்தாஸ்ப் தனக்கு விரோதமாகக் கிளம்புவதறிந்து அடக்கிவரப் பாலக்காட்டின் வழியாகச் சென்றபொழுது, ஆனகுண்டி என்ற நகரையும் கோட்டையையும் கைப்பற்றினன். நகரத்தலைவனது குடும்பத்தாரைத் தொலைத்து அந்நகர் மந்திரியான அரிகரதேவனைத் தலைவனாக்கிச் சென்றனன். இந்த அரிகரதேவன் தான் துங்கபத்திரை நதிக்குத் தென்கரையில் வித்யாரண்யபுரம் என்னும் விஜயநகர ராஜ்யத்தை ஸ்தாபித்தவன். தெலிங்கானா ராஜவம்சத்தினரில் ஒருவன் கோல்கொண்டா ராஜ்யத்தை ஏற்படுத்தினன். குஜரத்தில் தொந்தரவுக்குட்பட்டிருந்த முகலாயர்கள் தக்காணத்துக்கு ஓடிவந்து, உசைன் இஸ்மாயில்நாஜர்க்கான் என்பவனைத் தலைவனாகக்கொண்டிருந்தார்கள். இத்தலைவன் கங்கு

என்று தனது பிராமண எஜமானன் சொற்படி நல்வாழ்வை அடைந்தமைக்கறிகுறியாக, 1347ல் தான் ஏற்படுத்திய ராஜ்யத்துக்குப் பாமினி ராஜ்யம் என்ற பெயரை அமைத்தனன். இதன் தலைநகர்களாகக் குல்பர்கா, வாரங்கால், பீடார் என்பவை விளங்கின. 1351ல் தக்ளக் சிந்து நாட்டுக் கலகக்காரர்களைத் துரத்திச்செல்கையில் இறந்து விட்டான். இவனுக்குப்பின் பிருஸ்ஷாவும், 2-வது முகமது தக்ளக்கும் பட்டத்துக்குவந்தனர். பிந்தியவன்காலத்தில் தாமர்லேன்படையெடுப்பும் நடந்தது. 2-வது முகமது தக்ளக்குப்பின், கிஸிர்கான் முதலிய ஸையது வமிசத்தரசர்களும், ஆப்கானியத்தலைவரான லோடிவம்சத்தரசர்களும், 1526-வரை ஆண்டு வந்தனர். கடைசி லோடியரசன் இபுருகிம்லோடியிடம் வெறுப்புற்ற பஞ்சாப் கவர்னர் தௌலத்கான், லோடியின் தூண்டுதலின் பேரில், காபூல் சுல்தானாகிய பேபர் படையெடுத்து வந்து பாணிப்பட் என்ற இடத்தில் 1526ல் இபுருகிமை எதிர்த்து வென்று, முகலாயச் சக்கரவர்த்தியாயினன். இவனுக்குப்பின் உமாயூன், அக்பர், சாலிம், ஷாஜகான், அவுரங்கசீப் முதலியவர்கள் இரண்டு நூற்றாண்டுகள் பிரபலமாக ஆண்டுவந்தார்கள்.

## மாலிக்காபர் படையெடுப்பின் பின்னர் மதுரை நிலைமை.

மாலிக்காபர் படையெடுப்பின்பின்னர் மதுரைமுதலியவற்றின் நிலைமையைக்கவனிப்போம். 1310முதல் 1358வரை 48-வருடங்கள் மதுரை முகமதியவம்சமன்னர்கள்கைவசத்தில் இருந்தது. அழகர் கோவிலுக்குச் சொந்தமான மேலை இரண்பமுட்ட நாட்டின் காணியாட்சியுரிமை குளமங்கல

வாசி ஒருவருக்கு விற்பனைசெய்யப் பட்டிருப்பதைக் குறிக்கும் சாசனத்தில் "காலம் துலுக்கர் காலம். கோவில் தேவதான நிலங்களுக்குக் குடிமை என்ற வரிவிதிக்கப்பட்டது. கோவில் நிலங்களின் உழவுகிராமக்குடியானவர்களால்முறை வைத்துநடத்தப்பட்டது. கோவிற்பூஜைக்காரியங்கள் குறைவின்றி நடக்கவேண்டி இருந்தன. இந்நிலைமையில், கம்பண உடையார் தெற்கேவந்து முகமதியரைத் தொலைத்து நாடு முழுமைக்கும் நல்லதுரைத்தனத்தை ஏற்படுத்தினர். கோவில்களில் முன்போலப்பூஜைக்காரியங்கள் புதுப்பிக்கப்பட்டன. கோவிலையும் நாட்டையும் ஒழுங்காகக்கவனித்துவர நாயக்கன்மார்கள் என்ற அதிகாரிகளை நியமித்தனர். மேல்வாரம் முதலிய வரிவிகிதங்களையும் திட்டஞ்செய்தனர்' என்றுகுறிக்கப்பட்டுள்ளன. இச்சாசனம் மாறவர்ம வீரபாண்டியனின் 31-வது ஆண்டிற் பிறந்ததெனக் குறிக்கப்பட்டிருப்பதால் இப்பாண்டியனின் ஆட்சியாரம்பகாலம் 1326-27 என்று மதிக்கப்படுகிறது. குறிப்பிடப்பட்ட கம்பண உடையார் விஜயநகர ராஜ்யத்தை ஏற்படுத்திய அரிகர தேவனுடைய சகோதரன் 1-வது புக்கணராயனுடைய மகன். இவனுக்குப் பின் எம்பணவுடையாரும் பொற்காசுடையாரும் ஆண்டனர். புதியபாமினிராஜ்யம் விஜயநகர ராஜ்யத்தின் பலத்துக்கு எவ்வளவு சாதகம் கொடுப்பதாயிருந்ததோ அவ்வளவுக்கு நாளடைவில் பாதகமும் கொடுப்பதாயிற்று. 1371-ல் விஜயநகரத்துக்குத் துணைபோலிருந்த வாரங்கல் அரசன் கொல்லப்பட்டு, அந்நாடு பாமினிராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டது. புக்கணராயன் 1379ல் இறந்ததும் 2-வது அரிகரனும் பின் 1399ல் 2-வது புக்கணனும் ஆளலானார்கள். பிந்தியவன் குல்பர்கா சுல்தானுக்குக் செலுத்தப்பட்டு வந்த

சப்பத்தை நிலுத்தி, கீழ்கடற்கரைப்பகுதியில் மீண்டும் ஏற்பட்ட துருக்கர்களின் அக்கிரமச் செயல்களை அடக்கித் தன் பிரதிநிதிகளாக இலக்குமணநாயக்கர் நரசைய நாயக்கர் என்பவர்களை ஏற்படுத்திச் சென்றான். 1558-வரை விஜய நகரச் சக்கரவர்த்தியின் பிரதிநிதிகளாக 14-நாயக்கர்கள் ஆண்டு வந்தார்கள். அரிகரதேவ வம்சத்தரசர்களிற் கடைசியரசனுகிய 1-வது விருபாக்ஷராயன் காமுகனுவும் குடிவெறியனுகவும் இருந்தது காரணமாக நாடுகள் பல அன்னியர் வசப்பட்டன. குடிகளும் வெறுப்படைந்தனர். இந்த நிலைமையில் விஜய நகர ராஜனுக்குப் பந்துவாக ராஜமந்திரியில் ஆண்டு வந்த நரசிம்மதேவன் பாமிணசுல்தான் முகமதுவின் படையெடுப்புக்குப் பயந்து, விஜய நகரம வந்திருந்தவன்; 1-வது விருபாக்ஷராயனின் இரண்டாவது குமாரன் பதேவராயனிடம் தந்தவித்துக்கொண்டிருந்த ராஜ்யத்தைக் கொண்டு 1409ல் சிம்மாசனம் எறினன். பாமினி சுல்தான்முகமது கொண்டாவீடு மசூலிபட்டணம் போன்ற பகுதிகளை அடைந்த இறுமாப்பினல், 1481ல் தன்னிடம் விசுவாசம் வைத்திருந்த மந்திரி முகம்மது காவனைக்கொல்வித்தது காரணமாக நாட்டிலுள்ள பிரபுக்களும் குடிகளும் வெறுப்படைந்தனர். பிரபுக்கள் விகாரித்துத் தனிராஜ்யங்கள் ஏற்படுத்தலானுர்கள். 1482ல் முகமது இறக்க, அவன் மகன் 2-வது முகமது பட்டத்துக்குவந்தான். காசிம்பரீத் பீடாரிலும் யூசுப் அடில் ஷாபிஜப்பூரிலும், அகமதுஷா பாமினி எலிச்சப் பூரிலும், நைசாமுல்முல்க் அகமது நகரிலும், குதுபுஷா கோல்கொண்டாவிலும் தனி ராஜ்யங்கள் ஏற்படுத் திக் கொண்டார்கள்.

# இரண்டாம் அதிகாரம்.

## விஜயநகர இராச்சியத்தின் வாழ்வும் தாழ்வும்.

நரசிம்மன் காலத்தில் விஜயநகரம் தனது பழைய பெருமையை அடைந்து வர முற்பட்டது. 1509ல் நரசிம்மன் மகன் கிருஷ்ணதேவராயன் பட்டத்துக்கு வந்தது முதல் இந்து சிற்றரசர்கள் பலரும் விஜயநகரராயனுக்கு அடங்கிநடக்கக்கட்டுப்பட்டனர். இவன் அரசனுக்குரிய அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் ஆகிய நற்குணங்களால் அலங்கரிக்கப் பெற்றவன். உதயகிரி, கொண்டா வீடுபோன்றவற்றைக் கொண்டதுடன் கீழ்கடற்கரைப் பிரதேசமுழுமையையும்தனது ஆளுகைக்கு உட்படுத்தினான். 1530ல் கிருஷ்ணதேவராயன் காலஞ்சென்றதும், இவன் சகோதரன் அச்சுதராயன் சிம்மாசனம் ஏறினான். இவன் நடத்தையும் ஆட்சிமுறையும் நகரப்பிரபுக்களுக்குத் திருப்தியாயிருக்கவில்லை. 1532ல் திருவாங்கூர்மன்னன் தன்னைப்போல் விஜயநகர ஆதீனத்துக்கு உட்பட்ட பாண்டிய மன்னனுக்கு விரோதமாகப் படையெடுத்தான். இதையறிந்த அச்சுதன் தெற்கே பெரும்படையுடன் வந்து திருவாங்கூர் அரசனை வென்று வெற்றிக்குறிகுறியாக ஜயஸ்தம்பம் ஒன்றைத் தாம்பிரபரணி நதியில் நாட்டிச்சென்றதுடன் பாண்டியனுடைய சிநேகம் பலப்படும் பொருட்டுப் பாண்டியன் மகளையும் மணஞ்செய்து போனான். இதற்கு இடையில் விஜயநகரத்திலுள்ள பிரபுக்கள் கிருஷ்ணதேவராயனுடைய மருமக்களில் இராமராயனை முதலில் பட்டத்துக்கு உயர்த்தினார்கள். ஆனால் திருப்தியடையாமல், இராமராயன் சகோதரன் திருமலைராயனைச் சிமமாசனத்தேற்றினார்கள். திருமலைராயன் தமையனிலும் அதிருப்திகொடுப்பவனாகவே மீண்டும்

இராமராயனைச் சிம்மாசனத் திருத்தினர். அவமரியாதை செய்யப்பெற்ற திருமலே இப்ராகிம் அடில்ஷாவை விஜய நகரத்தின் மீது படையெடுத்துவரத் தூண்டினன். படையெடுத்துவந்த சுல்தான் லஞ்சம்பெற்றுத் திரும்பிவிட்டான். 1541ல் அச்சுதராயன் இறந்ததும், கிருஷ்ண தேவராயன் மகன் சதாசிவராயன் பட்டத்துக்குவந்தனன். இவன் பேருக்கு அரசனுயிருந்தானுகிய இராச்சியாதிகார முழுமையும் இராம ராயனிடத்திலும், இராமராயனின் சகோதரர்கள் திருமலே, வேங்கடாத்ரி இவர்கள் கைவசமுமேயிருந்துவந்தன. 1543ல் நைஸாம்ஷா, கோல்கொண்டா சுல்தான், இராம ராயன் இம்மூவரும் தமக்குள் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டு பிஜப்பூர்ச் சுல்தானை எதிர்த்தார்கள், பிஜப்பூர் சுல்தான் வேண்டு கோட்படி பெல்கோவான் அசத்கான் கோல்கொண்டா சுல்தானை எதிர்த்துக் காயப்படுத்தினன். 1557ல் சுல்தான் இப்ராகிம் இறந்ததும், இவன் மகன் அலிஅடில் பட்டத்துக்கு வந்ததும் இராமராயனுடன் சமாதானம் செய்துகொண்டு ஆமத் நகர் சுல்தானையும் கோல்கொண்டா சுல்தானையும் கலியாணி என்ற இடத்தில் எதிர்த்துச் சண்டை செய்யும் பொழுது, கோல்கொண்டா சுல்தான் ஆமத்நகர் சுல்தானைக்கைவிட்டு அலிஅடில் பக்கம் வந்து விடவே, ஆமத்நகர் சுல்தான் தன் உயிர்தப்பி ஆமத்நகருக்கு ஓடநேர்ந்தது. சேர்ந்தமன்னர்கள் ஆமத்நகரையும் முற்றுகையிட்டுக் கெடுத்தபின்பு பிரிந்து போனுர்கள். இங்ஙனம் சுல்தான்களுக்கு உதவியாயிருந்ததினுல் இராமராயனுக்குக் கான்புரம் பனகால் போன்ற இடங்கள்கிடைத்தன. நாட்டின்மேல் நாடுசேர்வதால் கர்வமுற்ற இராமராயன் மேலும் மேலும் முகமதிய நாடுகளைச் சேர்த்துக் கொள்ள

ஆசை முதிர்ந்தவனானன். இப்பேராசையை அறிந்த பிஜப்பூர் சுல்தான் தன் மதத்தவரான முகமதியர்களை யெல்லாம் ஒன்றுபடுத்தி இந்த அரசர்களை எதிர்த்து ஒடுக்கச் சூழ்ச்சி செய்தனன். இந்த உபாயத்தைக் கோல்கொண்டா சுல்தானிடம் தெரிவித்ததும், அவன் ஆமத்நகர சுல்தானுக்கும் பிஜப்பூர் சுல்தானுக்கும் இடையில் இருந்த மன வேற்றுமைகளை நீக்கி மணங்களின் மூலம் பந்துத்வத்தையும் பலப்படுத்தி ஐக்கியப்படுத்தினான். இங்ஙனம்மதவொற்றுமையினாலும் சிநேக உணர்ச்சியாலும் கட்டுப்பட்ட முகமதிய இராச்சியங்கள் தங்கள் பொதுவிரோதியான விஜயநகர ராஜ்யத்தைக்கெடுத்து வெல்வதற்குக் காலம் பார்த்துக் கொண்டிருந்தன.

## மதுரை நாயக்கப் பிரதிநிதிகள்.

தென்னிந்தியாவில் 1557ல் தஞ்சையில் அரசுபுரிந்த வீரசேகரசோழன் மதுரையை ஆண்ட சந்திரசேகர பாண்டியனை எதிர்த்து நாட்டைக்கைக்கொண்டான். உடனே பாண்டியன் தனது குலத்திற் சம்பந்தங் கொண்டுள்ள விஜயநகர ராயனிடம்தெரிவித்தலும், ராயன் தனது தளகர்த்தன் நாகமநாயக்கனைத் தென்னாட்டிக்குப் படையுடன் அனுப்பித் தஞ்சை மன்னனிடமிருந்து நாட்டை மீட்டுப் பாண்டியனுக்குத் திருப்திசெய்து வரும்படி கட்டளையிட்டான். சோழனை வென்ற நாகமன் நாட்டைப் பாண்டியனிடம் ஒப்புவிக்காமல் தானே அரசனாக ஆண்டுவரமுற்பட்டனன். இதனைக்கேட்டு ஆத்திரமுற்ற இராமஇராயன் இராச சபையைக்கூட்டி நாகமனைக் கொன்றாவது உயிருடனாவது கொண்டு வரக்கூடிய வீரர் இச்சபையில் உளரா இலரா என்று கேட்ட பொழுது

தன் தந்தையாகிய நாகமன் செய்தது அரசத்துரோகம் என்பதை அறிந்தவனும், மகிதலத்தில் மாப்பெருந்தந்தைமன்னவனே என்பதைத் தெரிந்து தான் அப்பொழுதுசெய்யவேண்டிய கடமையிது வெனத்துணிந்துகொண்ட அதிசாமர்த்திய சாலியுமாகிய விசுவநாதநாயக்கன் தானே சென்று தந்தை முடியை மன்னன் அடியிற் சேர்ப்பதாக வாக்குறுதி செய்தபடியே, தென்னாடு சென்று தன் தகப்பனைப் போரில் தோற்கடித்துக் கைதியாக்கி இராமராயன் அடியில் தன் தகப்பனின் முடிபடும்படி வணங்குவித்தான். விசுவநாதனின் செய்தற்கு அருஞ்செய்கையைக்கண்டு மகிழ்ந்தராயன் விசுவநாதனுக்குத் தன் மகள் காஞ்சனையை மணஞ்செய்துகொடுத்து மகிழ்வுண்டாக்கியதுடன் நாகமன்செய்த குற்றத்தையும் பொறுத்து நாகமனைப்பழையபடி உயர்பதவிக்கு உயாத்தினன். பாண்டிய நாட்டிலுள்ள குடிகளும் தங்கள் பாண்டிய மன்னர் பரம்பரையில் தக்கவர் இருந்துஆளக் கூடாமையை உணர்ந்து இராமராயனிடம் விண்ணப்பித்துக்கொண்டதற்கு இணங்க, விசுவநாதநாயக்கன் விஜயநகர ராயன் பிரதிநிதியாக ஆண்டுவரும்படி கௌரவிக்கப்பட்டனன்.

1559-முதல் 1736-வரை விஜயநகரப் பிரதிநிதியாக மதுரை ராச்சியத்தை ஆண்டுவந்த நாயக்க மன்னர்களில் முதல்வனாகிய விசுவநாதன் 1559-முதல் 1563-வரை ஆண்டு வந்தனன். இவனது ஆட்சி மாட்சியுறுவதற்குப் பெருந்துணையாக விளங்கியவர் அரியநாயக முதலியார் இவர் மந்திரியாகவும், தந்திரியாகவும் வேலை பார்த்தவர். தமது அறிவாற்றலால், நாட்டில் சிதறுண்டிருந்த சிறுதலைவர்களில், அரசாங்கத்துக்குப் பொருத்தமாக நடந்து கொள்ளக் கூடியவர்கள்

தலைமையில் 72-பாளையப்பட்டுக்களை ஏற்படுத்தினர். இப்பாளையப்பட்டுக்காரர்கள் மதுரை ராஜ்பத்துக்கு விரோதமான படையெடுப்புக்கள் ஏற்படின், தங்கள் கைவசமிருக்கக்கூடிய படைகளைக் கொண்டு எதிரியை எதிர்த்து நாட்டைக் காக்க வேண்டியவர்கள். நாட்டில் பயிர்த்தொழில் விருத்தியாகிக் குடிகள் சுகவாழ்வு அடையும் பொருட்டு, பாசன விசேஷத்தைக் கருதி வைகையாற்றில் பேரணை, சிற்றணை, என்ற அணைகளைக் கட்டுவித்து அவைகளிலிருந்து பலகால்வாய்களையும் வெட்டுவித்தவர் மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தை அலங்கரிக்கும் ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டுவித்தவர். இவர் அபிப்பிராயப்படி நாட்டிலுள்ள இராமேஸ்வரம் ஸ்ரீரங்கம் ஆகியபுண்ணியஸ்தலங்களைத் தரிசிக்கச் செல்லும் யாத்ரீகர்களுக்கு வழிகளில் ஏற்பட்ட வழிப்பறி கொள்ளை முதலியகலவரங்களை அடக்கி ஒழுங்கு செய்வதற்காகத் தனக்குச் சொந்தமாயிருந்த வல்லம் கோட்டையைத் தஞ்சை மன்னனுக்குக்கொடுத்துத் தஞ்சைமன்னனுக்குச் சொந்தமான திரிசிரபுரம்கோட்டையைத் தான்பெற்றுப்பலப்படுத்தி அதனையே தலைநகராகக்கொண்டு நாட்டை ஆண்டுவர முற்பட்டனன். இங்ஙனம், நாட்டை ஒழுங்குக்குக் கொண்டுவந்த விசுவநாதன் 1563ல் காலஞ்சென்றதும், விசுவநாதநாயக்கன் மகன் குமார கிருஷ்ணப்ப நாயக்கன் பட்டத்துக்கு வந்தான். இவன் 1563-முதல்1573 வரை ஆண்டுவந்தனன். இந்தநாயக்கன காலத்தில்,வடக்கே பிஜப்பூர்ச்சுல்தான் சூழ்ச்சிப்படி முகமதியமன்னர்கள் 1564ல் பிஜப்பூர்வெளியில் தங்கள் சேனைகளுடன் கூடித் தக்காணத் தரிசு நிலங்களின் வழியாகக் கிருஷ்ணாநதியினபக்கம் தலைக் கோட்டைக்கு அருகில் விஜயநகரராயன் முதலிய இந்து

அரசர்களை எதிர்க்கலானார்கள். இராமராயன்படையில் காலாட்படை 60000, குதிரைப்படை 100000 மும் இருந்தன. மதுரைத் தளவாய் அரியநாயகமுதலியாரும் தலைக்கோட்டைக்கு வந்திருந்தார். 1565 ஜனவரிமீ 23உயில் இரண்டு பக்கச் சைனியங்களும் நெருங்கி யுத்தம் செய்ததில் இந்துப் படை வீரர்களில் எண்ணிறந்தவர்கள் கொலையுண்டார்கள். இராமராயன் தலை வெட்டுண்டு வேடிக்கைப் பொருளாகக் கொண்டு போகப்பட்டது. விஜயநகர ராஜ்ஜியம் கொள்ளையிட்டுப் பாழாக்கப்பட்டது. வேங்கடாத்ரியும் கொல்லப்பட்டான். உயிர் தப்பி ஓடிய திருமலைராயன் விஜயநகரத்துக்குத் திரும்பி அங்கிருந்த ஆந்தன் ராஜாவாகிய சதாசிவராயனை அழைத்துக்கொண்டு அனந்தபுரம் ஜில்லாவிலுள்ள பேனுகொண்டா மலைக்கோட்டைக்குப் போனான். போகும்பொழுது, பிரசித்திபெற்ற நவரத்தின சிம்மாசனம் இராஜவிருதுகள் நவமணிகள் இவற்றையும் கொண்டுசென்றான். விஜயநகரத்துக்கு உட்பட்டிருந்த சிற்றரசர்கள், தலைவர்கள் சுயாதீனமாக ஆளுமுற்பட்டார்கள். மதுரைநாடு குமாரகிருஷ்ணப்பனுக்கும், தஞ்சைநாடு வீரராகவநாயக்கனுக்கும், மைசூர்ராச்சியம் ஸ்ரீரங்கபட்டணத்தலைவனுக்கும் அநேகமாக சுயாதீனமாயின. இம்மூன்று நாடுகளுக்கும் ஏகதளவாயாகவிருந்த அரியநாயகமுதலியாரும் 1566ல் மதுரைக்குத் திரும்பினார் அரியநாயகமுதலியார் பாண்டியநாட்டில் இல்லாதசமயத்தில் பரமக்குடிப்பக்கம் உண்டான தும்பிச்சி நாயக்கன் கலகம் சேனாதிபதி கேசவப்பன் மகனாலும், தும்பிச்சி நாயக்கனுக்கு உதவியாயிருந்த கண்டிராஜன் போர் குமார கிருஷ்ணப்ப நாயக்கனாலும் ஒடுக்கப்பட்டன. 1573ல் குமாரகிருஷ்ணப்பன் இறக்கவே, இவன் குமாரர் கிருஷ்ணப்பன் என்ற பெரிய

வீரப்பனும் 2-வது விசுவநாதநாயக்கனும் சேர்ந்து பட்டத்துக்கு வந்தார்கள் இவர்கள்காலத்தில் காளையார்கோவிலில் தங்கிவந்த மாவலிவாண ராஜன் கலகம் அடக்கப்பட்டது. முதலில் விசுவநாதனும் இவனுக்குப்பின் 1595ல் கிருஷ்ணப்பனும் காலஞ்சென்றதும், விசுவநாதன் மக்கள் லிங்கயன் என்ற குமாரகிருஷ்ணப்ப நாயக்கனும் விசுவப்பன் என்ற 3-வது விசுவநாதநாயக்கனும் சேர்ந்து பட்டத்துக்கு வந்தார்கள். 1600ல் அரிய நாயக முதலியாரும், காலஞ்சென்றார். அரிய நாயகமுதலியார் காலத்துள் மதுரை ராச்சியம் வடக்கே வாலிகொண்டா முதல் தெற்கே கன்னியாகுமரி வரைக்கும் கிழக்கேகீழ்கடல் முதல் மேற்கே மேற்குத் தொடர்ச்சிமலை வரைக்கும பரவியிருந்தது. விசுவநாதன் காலஞ்சென்றபின் 1602ல் லிங்கயன் இறந்ததும் லிங்கயன் மகன்முத்துக்கிருஷ்ணப்பன் பட்டத்துக்குரியவனானன். ஆனால், இவன் சிற்றப்பன் கஸ்தூரிரங்கையன் பலவந்தமாகப் பட்டத்தைக்கைப்பற்றி ஒருவாரம் ஆண்டனன். இதற்குள் முத்துக்கிருஷ்ணனுக்கு வேண்டிய பிரபுக்கள்கஸ்தூரியைக்கொன்று,முத்துக்கிருஷ்ணனைப் பட்டத்துக்கு உயர்த்தினார்கள். இவன் காலத்தில் போகலூரில் இருந்த சிற்றரசனாகிய சடையத்தேவன் உடையான 72-பாளையப்பட்டின் தலைவனாகச்சேதுபதிஎன்ற பட்டத்துடன் சிறப்பிக்கப் பட்டான். இவனே இராமநாதபுரம் கோட்டையைக்கட்டுவித்தவன். 1609ல் முத்துக்கிருஷ்ணப்பன் இறந்ததும இவன்குமாரன்முத்துவீரப்பன், திருமலை, குமாரமுத்து ஆகியமூவரில், மூத்தவனான முத்துவீரப்பன் சிம்மாசனம் ஏறினன் தஞ்சை மைசூர் மன்னர்களுடன் சண்டை நடந்தது. நாட்டின் மீதுபடையெடுத்துவந்த முகமதியப்படை விருபாட்சித்தலைவனுளும்,முகலாயர்சேனை

நடுக்கட்டளைப்பாளையக்காரன் சின்னக்காத்திரளாலும்தூரத் தப்பட்டன. 16-வது நூற்றாண்டின் இறுதியில் பரவுதலாகி வந்த கிறிஸ்தவமதம் பின்வந்த பாதிரிமார்களின் ஒற்றுமைக் குறைவினால் தடைபட்டிருந்தது. 1623ல் முத்துவீரப்பன் இறந்ததும் அடுத்த சகோதரனாகிய திருமலைநாயக்கன் மதுரையில் வந்ததனதுமுன்னோர்களைப்போல் ஸ்ரீமீனாட்சி சந்நிதானத்தில் செங்கோல் பெற்றுத் திருச்சியிலிருந்து ஆண்டுவந்தான்' இவன் அநேகவருடங்கள் காசநோயால் கஷ்டப் பட்டவன். மதுரை மகோத்ஸவத்துக்கு வந்துகொண்டிருக்கும்பொழுது மேற்படிநோய் பொறுக்கமுடியாது திண்டுக்கல்லில் தாமதித்தான். அப்பொழுது ஸ்ரீசோமசுந்தரப் பெருமான் திருவருளால் இவனுடையகாசநோயும் நீங்கியது. உடனேமதுரையைத்தலைநகராகக்கொண்டு ஆண்டுவரவும், ஐந்துலட்சம்பொன்செலவு செய்து கோவில் திருப்பணி திருவாபரணம் பண்ணிவைப்பதாகவும் முடிவுசெய்துகொண்டான். அங்ஙனமேமதுரையிலிருந்து அரசாண்டுவந்ததுடன் மதுரையைச் சிறப்பித்துத் தனது ஆளுகையை விளக்கக்கூடிய, திருமலை நாயக்கன்மஹால், வண்டியூர்த் தெப்பக்குளம், புதுமண்டபம், இராயர் கோபுரம் இவற்றைக் கட்டுவித்து நகரத்தையும் இப்பொழுதிருக்கும் அலங்கார விசித்திர வீதிகளுடன் அமைத்தனன். ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலும் வேண்டும் திருப்பணிகளைச் செய்து, விலையுயர்ந்த ஆபரணங்களையும் கோவிலுக்கு உதவினான். திருமலை நாயக்கன் தன் நாட்டின் மீது பழையபகை பற்றிப் படையெடுத்து வந்த மைசூர் படையைத் தளவாய் இராமப்பையர் சாமர்த்தியத்தால் முறியடித்துத் தோற்றோடச் செய்தனன். 1621-முதல் 1634-வரை இராமநாதபுரத்தில்

ஆண்டு வந்த கூத்தன் சேதுபதி இறந்ததும், இவன் மகன் 2-வது சடையத் தேவன் பட்டத்துக்கு வந்தான். இவன் இரண்டொரு வருடம் ஆண்டபின், குழந்தையில்லாமை யால் தனது சுவிகார புத்திரன் இரகுநாதத் தேவனிடம் நாட்டை ஒப்புவிக்க முற்பட்டபொழுது, கூத்தன் சேதுபதி யின் தாசிமகன் தம்பி தடுத்துக் கலகம் செய்தனன். இக் கலகமும் ஒடுக்கப்பட்டு இராமநாதபுரம் சீமையும்மூன்ருய்ப் பிரிக்கப்பட்டு, இராமநாதபுரம் இரகுநாதத் தேவனுக்கும் சிவகங்கை தம்பிக்கும் திருவாடானை தணக்கத் தேவன் வகைக்கும் அளிக்கப்பட்டன. கடைசியில் எல்லாம் இரகு நாத சேதுபதி ஆட்சிக் குட்பட்டன. திருமலை நாயக்கன் விஜயநகர ஆதீனத்துக்கு உட்படாமல் ஆண்டுவர முற்பட் டனன். இவ்வித முற்பட்டும் விஜயநகரராயன் மதுரை நாயக் கன் மீது உடனே படையெடுத்து வராத காரணத்தைக் கவனிப்போம்.

தலைக்கோட்டைச் சண்டைக்குப் பின், உயிர்தப்பிய திருமலைராயன், விஜய நகரத்திலிருந்த ஆடுதன் ராஜா சதா சிவராயனைப் பேனுகொண்டா மலைக்கோட்டைக்கு அழைத் துப்போனான் என்று முன்னர்ச் சொன்னேம் அல்லவா? அழைத்துப்போன திருமலைராயன் 1568-ல்சதாசிவராயனைக் கொன்று தானே அரசனாயினன். இவனுக்குபின் இவன் மகன் ஸ்ரீரங்கராயன் 1575-ல் பட்டத்துக்கு வந்தான். சில வருடங்கழித்துத் தலைநகர் சந்திரகிரிக்கு மாற்றப்பட்டது. 1586-ல் ஸ்ரீரங்கராயனுக்குப் பின் இவன் சகோதரன் வேங்கடராயன் சிம்மாசனம் ஏறினான். இவன் மனிதசுபா வங்கள் மிகுந்தவனாயினும் அரசனுக்குரிய குணங்கள் அமைந்தவனல்லன். நாட்டில் குழப்பங்கள் உண்டாயின.

சர்வாதிகாரியாயிருந்த மந்திரி சாளுவன் அரசனாக ஆட்சி கொண்டு ஒரு நாள் திடீரென்று வேங்கடராயனையும் அவன் குடும்பத்தாரையும் சிறைப்படுத்திப் பின் கொல்வித்தனன். வேங்கடராயனின் இரண்டாவது குமாரன் ஸ்ரீரங்கராயன் மட்டும் உயிர்தப்பிப்போக நேர்ந்தது. உயிர்தப்பியோடினவன் சென்னப்பன் என்ற பெயருடன் சாளுவ மன்னனிடம் போர் வீரனாகச் சிறந்து பின் செங்கற்பட்டுத் தலைவனாகவும் விளங்கினான். செங்கற்பட்டுத்தலைவனாயிருக்கையில், கிழக்கு இந்தியக்கம்பெனி சூப்ரெண்டெண்டு மிஸ்டர் டே தமது கம்பெனி வியாபாரம் போர்ச்சுகீசர் வியாபாரத்துடன் போட்டியாய் நின்று கெட்டுப் போகாதிருக்க மைலாப்பூருக்கருகில் ஓர் இடம் கொடுத்துதவும்படி வேண்டினான் சென்னப்பன் யோசித்துச் சொல்லி யனுப்புவதாகத் தெரிவித்தான். பின் 1639ல் சென்னப்பன் தான் வேங்கடராயன் மகன் ஸ்ரீரங்கராயன் என்பதை ஆதாரங்களுடன் அறிந்து கொண்ட சந்திரகிரி வாசிகள் சென்னப்பனைச் சந்திரகிரி மன்னனாகச் சிம்மாசனத் தேற்றினார்கள். 1640ல் தனது வாக்கின்படி, இப்பொழுது செயிண்டு ஜார்ஜ்கோட்டைகட்டப் பட்டிருக்கும் இடத்தை மிஸ்டர் டேக்குக் கொடுத்துதவினன். மிஸ்டர் டே என்பவரால் நகரமாக்கப்பட்ட பாகத்துக்கு ஸ்ரீரங்கராயபுரம் என்ற பெயர் கொடுக்கப்படப் போவதாய்த் தெரிவிக்கப்பட்டபொழுது, ஸ்ரீரங்கராயன், சென்னப்பன் என்ற பெயருடன் விளங்க வேண்டுமென்று குறிப்பிட்டமைக்கு இணங்கச் சென்னப்பப்பட்டண மென்றே அழைக்கப் படுவதாயிற்று. இப்பெயர் சென்னபட்டணம் என்று மருவி வழங்கப்படுகிறது. 1646ல் ஸ்ரீரங்கராயனின் தலை நகராங்க

ளாகச் சிறந்தவை சந்திரகிரியும் செங்கற்பட்டும் ஆகும்.

விஜயநகர ராஜ்யத்தில் 1586-முதல் 1614-வரை ஆண்ட வேங்கடராயன் ஆட்சிக்குறைவாலும், பின்னர் சாளுவ மன்னன் நாட்டைக்கைக்கொண்டது முதல் ஜனங்கள் வெறுப்படைந்திருந்ததனாலும், சிற்றரசர்கள் சுவாதீனம் அடைந்து கொள்வாராயினர். இந்த முறையில் தான், திருமலை நாயக்கனும் கப்பங்கட்டாது சுவாதீனமடைய முற்பட்டதுஎன்க. ஆனால் பிரபல ஸ்ரீரங்கராயன் சிம்மாசனம் ஏறியதும் தன்னைப் பொருட்படுத்தாதிருந்த திருமலை நாயக்கனுக்குவிரோதமாகப் படையெடுத்து ஒடுக்கப் புறப்பட்டனன். திருமலை தஞ்சை செஞ்சிமன்னர்களின் கூட்டுறவைப்பற்றி எதிர்க்கத் துணிந்தனன். மைசூர் அரசன் உதவியை மட்டும் பெற்ற ஸ்ரீரங்கராயனைக் கண்டதும் தஞ்சை மன்னன் சரணடைந்து திருமலையின் இரகசியத்தை வெளிப்படுத்தினன். இரகசியம் அறிந்த ராயன் செஞ்சியை முற்றுகையிட்டதுணர்ந்த திருமலை கோல்கொண்டா சுல்தானைத் தூண்டி ராயன் நாட்டின் மீது படையெடுக்கச் செய்தனன். உடனே இராயன் செஞ்சியை விட்டுக் கோல்கொண்டா சேபாவைத் தாக்கச் சென்று தோற்கடித்தான். ஆனால் தோற்றுப்போன சேபா மீண்டும் பெரும்படையுடன்வந்து போராடி வெற்றிகொண்டான். தோல்வியுற்ற இராயன் இந்த மன்னர்களின் சகாயம் பெறப் பெரிதும் முயன்றும் பயன்படாமை கண்டு பெத்தனூர்த் தலைவனிடம் அடைக்கலம் புகுந்திருந்தான். பின்னர் கோல்கொண்டாசேபா செஞ்சியை முற்றுகையிட்டிருப்பதறிந்த தஞ்சை மன்னன் தூதனுப்பிச் சமாதானம்

செய்து கொள்ளவே, திருமலைநாயக்கன் செஞ்சியை மீட்க, தக்கணசோபாவாகிய ஜடால்கானைத் தனக்குதவி புரியும்படி கேட்டனன். ஜடால்கான் படையுடன் வந்து உதவி செய்வது போல நின்று சமயத்தில் கோல்கொண்டா படையுடன் சேர்ந்து கொண்டான். இதற்கிடையில் ஸ்ரீ ரங்க ராயனும் மைசூர் அரசனுதவியாற் கிடைத்த படையுடன் கோல்கொண்டா நவாப்பின் கைவசப்பட்ட நாடுகளை எதிர்க்கலாயினன். கோல்கொண்டா சோபா தன் நாட்டைக் காப்பதினிமித்தம் படையுடன் வடக்கேசென்றனன். திருமலை தன்படையுடன் செஞ்சிக் கோட்டைக்குள் புகுந்து க்ஷேமமாயிருக்கலா மென்று நினைத்திருந்தான். உள்ளிருந்த செஞ்சி வீரர்களுக்கும் தன் படை வீரர்களுக்கும் விரோத முண்டானதால் முகமதியப்படைகள் அதலுடைய படைவீரர்களை எளிதில் வென்றன. திருமலை மதுரைக் கோட்டைக்குள் பத்திரமாயிருக்க ஒடினன். தஞ்சை மன்னனைக் கப்பங்கட்டச்செய்த சோபா மதுரையையும் எதிர்த்தபொழுது திருமலை பெரும்பொருளைக் கொடுத்துச் சமாதானம் பண்ணினன். கப்பமும் கட்டிவர இசைந்தனன். ஸ்ரீரங்கராயன் வடக்கில் சோபாப் படைகளை வென்று ராச்சியத்தை மீட்டு ஆவக் கூடிய தருணத்தில் திருமலையின் தூண்டுதலால் முகமதியர்கள் மைசூரைத்தாக்கிப் பணியச்செய்ததுடன் ராயனையும தலையெடுக்கவொட்டாது தடுத்துவந்தார்கள். திருமலையின் எஜமானத்துரோகத்தையும் வஞ்சகத்தையும் கண்டு அவனைக் கெடுக்கக்கருதி மைசூர் அரசன் படையை அனுப்பி மதுரையைத் தாக்கச்செய்தான். ஆனல் கவலைப்பட்டுக் கொண்டிருந்த திருமலைக்குச் சேதுபதியின் அநுகூலம் ஏற்பட, மைசூர் படை முறியடிக்கப் பட்டது.

மைசூர்ப் படைகள் மதுரையைத் தாக்கிச் சிறைப்படுத்திய கைதிகளை மூக்கறுத்து அவமானப் படுத்தியதைக் கண்ட திருமலை, மைசூரிலும் அவ்வாறு செய்துவரும் பொருட்டுத் தனது சகோதரன் குமார முத்துநாயக்கனை அனுப்பிவைத்தனன். சென்ற குமாரமுத்து மைசூர் மன்னனின் நாசியை அறுத்துத் தமையன் பார்வைக்கு அனுப்பிவைத்து மதுரைக்கு வந்துகொண்டிருக்கையில், தனது தமையனான திருமலை நாயக்கனின் குமாரன் முத்து வீரப்பன் என்ற முத்து அழகாத்ரி 1659 பிப்ரவரியில் சிம்மாசன மேறினான். இவன் காலத்தில் தென்னாட்டின் மீது முகமதியர் படையெடுத்து வந்தனர். அழகாத்ரி அவர்களை எதிர்த்தற்கு உதவியாகத் தஞ்சை மன்னனுடன் உடன்படிக்கை செய்தான். ஆனால் முகமதியர் வேகமாகத் தஞ்சையைக் கைவசப்படுத்திப்பாழ் படுத்திக்கொண்டு திருச்சி மதுரையையும் தாக்க முற்பட்டார்கள். நாட்டில் ஏற்பட்டிருந்த நோயும் பஞ்சமும் அவர்களை வடக்கு நோக்கி ஓடச்செய்தமையால் அழகாத்ரியின் கவலை குறைந்தது. 1662ல் முத்து அழகாத்ரி காலஞ்சென்றதும் இவன் மகன் சொக்கநாத நாயக்கன் என்னும் 16-வயதுச் சிறுவன் பட்டத்துக்கு வந்தான். இவன் சிறுவனாயினும், மனோதைர்யமும ஆழ்ந்த யோசனையும் வாய்ந்தவன். இந்து மன்னர்களுக்குப் பாதுகாப்பிடமாகவும் தாயாகவும் விளங்கிய விஜயநகர ராச்சியத்தைப் பழையபடி உயர்த்த வேண்டுமென்ற பேராவல் கொண்டவன். முகமதியர்களைத் தமிழ்நாட்டினின்றும் துரத்தக்கருதினான். வயதிற் சிறியவனான காரணத்தால் இராசாங்கக் காரியங்கள் பெரும்பாலும் தளவாய் லிங்கமநாயக்கன், பிரதானி, ராயசக்காரன் இவர்களாலேயே நடத்தப்பட்டு வந்தது. இவர்களின் ஆலோசனைப்

படி திருச்சினப்பள்ளி தலைநகராக மாற்றப்பட்டது. செஞ்சிக் கோட்டையை மகமதியர் கைவசத்திலிருந்து மீட்டு வரும்படி தளவாய்லிங்கமநாயக்கன் மூலம் 400000 காலாட் படைகளை அனுப்பினன். லிங்கமனே பகைவரிடம் லஞ்சம் பெற்றுக் காரியத்தை நிறைவேற்ருதிருந்து விட்டான். தனக்கு விரோதமாகவே சகல காரியங்களையும் நடத்தி வந்த ராயசன் பிரதானி ஆகிய இருவரையும் அவர்களின் விரோதிகளைக் கொண்டு சிறைப் படுத்தினன். லிங்கமனைத் தண்டிப்பதற்காகப் பிடித்து வரச் செய்தது பயனற்றதாயிற்று. லிங்கமன் செஞ்சி மகமதியத் தலைவனுகிய ஸகோஜியுடன் சேர்ந்து திருச்சினப்பள்ளியை முற்றுகையிட்டான். வாலிபப்பருவத்துக்கேற்ற அஞ்சாமை ஊக்கம் முதலிய சிறப்புக் குணங்களைப் பெற்றுள்ள சொக்கநாதன் தனது உத்யோகஸ்தர்களின் வஞ்சகத்துக்கு உட்படாமல் தானே வெகுதைரியமாக அவ்விருவர் படையையும் எதிர்த்துத்தோற்கடித்தான் லிங்கமனும் செஞ்சித்தலைவனும் தஞ்சை நகருக்கு ஓடி விட்டதையறிந்த சொக்கநாதன் பெருங் காலாட் படையுடன் தஞ்சைமீது படை யெடுத்துச் சென்ருன். படை யெடுத்து வருவதுணர்ந்த பகைவர்இருவரும் செஞ்சிக்கு ஓடிவிடவே, தஞ்சை மன்னன் பணிந்து சமாதானம்செய்து கொண்டான் சிம்மாசனமேறிய முதல்வருட நிறைவுக்குள்ளேயே தனக்கு விரோதமாக நடந்த காரியஸ்தர்களைத் தொலைக்க ஏற்பட்ட போரால் நாட்டிற் பஞ்சமிகுந்து நோயும் பரவிற்று. 1663ல் பிஜப்பூர்சுல்தான் இதல்கான் சேனதிபதியான வனமியான் தன் முகமதியச் சேனைகளுடன் திருச்சினப்பள்ளியை முற்றுகையிட்டான். தன் சொற்படி சொக்கநாதன் கஞ்சமடையாதது கண்டு தோற்றுத் திரும்பிய சேனதிபதி செல்லும்

வழியிலிருந்த கிராமங்களை நெருப்பிட்டும் கொள்ளையடித் தும் பாழ்படுத்திச் சென்றான். இங்ஙனம் மகமதியர் சேனை யின் வாங்கிச் சென்றதும் தனக்கு உதவி புரிய வேண்டிய தஞ்சைமன்னன் உதவி செய்யாதிருந்ததில்வெறுப்படைந்து தஞ்சை மீது படையெடுத்துப் போய் வல்லம் கோட்டை யைப் பிடித்ததும் தஞ்சை மன்னனும் சமாதானம் பண்ணிக் கொண்டான். இதேமாதரி தனக்கு உதவிபுரிய முன் வராத சேதுபதிக்கு விரோதமாகப் படையெடுத்துச் சென்ற பொழுது சேதுபதிபக்கத்திலுள்ள காட்டில்பதுங்கிக்கொண் டான். திருப்பத்தூர், புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார்கோவில் முதலிய கோட்டைகளைப் பிடித்துக் கொண்டான். தனது தலைநகராகிய திருச்சிக்குத் திரும்பு கையில், தனது பாட்டன் திருமலைநாயக்கன் கட்டிய விசித் திர அரண்மனையின் பொம்மைகளையும் சித்திரப் பொருள் களையும் இடித்துப் பெயர்த்துத் திருச்சிக்கு அனுப்ப ஏற் பாடு செய்தனன். இதனால் திருமலைநாயக்கன் அரண்மனை யின் அழகு குறைந்தது. திருச்சியில் சொக்கநாதனால் சட் டப்பட்ட அரண்மனை அழகு பெருகியது.

இங்ஙனம் சொக்கநாதன் தான் பட்டத்துக்கு வந்தது முதல் தன் நாட்டில் படை யெடுத்து வந்த முகமதியர்களை அடித்தியடிப்பதில் முயற்சியும் பழைய விஜயநகர ராஜவம் சத்தைப் பலப்படுத்தி நிலைநிறுத்துவதில் சிரத்தையும் காட்டி வருவதை யறிந்த சந்திரகிரி ராஜன் ஸ்ரீரங்கராயன் தனது அன்பிற்சிறந்தபத்மினி வயிற்றிற்பிறந்த மங்கம்மாள் என்னும் மங்கையர்க்கரசியைச் சொக்கநாதநாயக்கனுக்கு மணம் புரிவித்துச் சொக்கநாதனைக் கௌரவிக்க முன்வந்த

னன். சொக்கநாதநாயக்கனும் அழகும் குணமும் அறிவும் அமைந்த மங்கம்மாளை மனம்புரிந்து இல்லறம் நடாத்திவந்தனன். சொக்கநாதனுக்குச் சந்திரகிரி மன்னன் உதவியும் சம்பந்தமும் ஏற்பட்டதைத் தெரிந்த லிங்கமநாயக்கனும் அரசனுடன் சிநேகம் பாராட்ட ஆரம்பித்தான். சொக்கநாதன் மதுரைராஜ்யத் தலைவனாகவிளங்கியகாலத்தில், அச்சுதவிஜயராகவநாயக்கன் தஞ்சைத் தலைவனாக விளங்கினன். விஜயராகவ நாயக்கனுக்கு முன் சேவப்பநாயக்கன், அச்சுதப்ப நாயக்கன் ஆகிய மூவரும் முறையே ஆண்டுள்ளார். மதுரை தஞ்சை ராஜ்யங்களைப் பிஜப்பூர்சுல்தானுக்குக் கப்பங்கட்டும்படி செய்வித்த ஷாகாஜிபான்ஸலி பங்களூர் கோலார் சேரா முதலிய இடங்களை ஜாகீராகப் பெற்று ஆண்டு வந்தனன். இவன் புத்திரர்களே சிவாஜி, வெங்கோஜி என்பவர்கள் 1664ல் ஷாகாஜி ஜாகீர்தாராக விளங்கினன். இக்காலத்தில் தான் சொக்கநாதன் தஞ்சைத்தலைவன் விஜயராகவநாயக்கன் மகள் மோகனாங்கி என்றபெண்மணியின் அழகு அறிவு குணம் முதலியவற்றைக் கேள்விப்பட்டு அப்பெண்ணைத் தன்மனைவியாக்கக் கருதித்தளவாய் வேங்கடகிருஷ்ணப்ப நாயக்கனைத் தூதனுப்பி வைத்தான். தஞ்சை நாயக்கன் பெண்பேசிவந்தமையை இகழ்ந்து பேசித் தூதனை அனுப்பிவிட்டான், இதன் பேரில் ஆத்திரமுற்ற சொக்கநாதன் தஞ்சையைத் தாக்கி வென்றுவந்து தான் விரும்பிய பெண்ணை மணமுடிக்கத் துணிந்தான். தஞ்சை நாயக்கனுக்குமன்னார்சாமி செங்கமலம் என்ற குமாரர்களும் உண்டு. யுத்த நெருக்கடியைக்கண்ட விஜயராகவன், அந்தப்புரத்திலுள்ள மனைவிமக்கள் யாவரையும் வெடிமருந்து வைத்துக் கொளுத்திவிட ஏற்பாடு செய்துவிட்டுத் தனது மூத்தமகன் மன்னார்சாமியும் தானும் எதிரி

யுடன் போர்புரிந்து ஒருமிக்க மாய்ந்தனர். தஞ்சையை யாளும் தலைவர்கள் வீணே இறந்தமைகண்ட சொக்கநாதன் தான் விரும்பிய * காதலி நெருப்பிலிறக்க நேர்ந்தமைக் குப் பெரிதும் வருந்தித் தனது வளர்ப்புச் சகோதரனுகிய அழகிரி நாயக்கனைத் தன் பிரதிநிதியாக நியமித்து விட்டுத் திருச்சிக்குத் திரும்பினன். இங்ஙனம் மோகனுங்கி மோச மானதின் பின்னரே சொக்கநாதன் சந்திரகிரி அரசன்மகள் மங்கம்மாளை மணம் புரிந்தது என்க.

உயிர்தப்பிய செங்கமலநாயக்கன், பிஜப்பூர்ச்சுல்தான் இதல்கானைச் சரணமடைந்து, தன்னைத் தஞ்சை மன்னன் ஆக்கும்படி வேண்டினன். இதல்கான், உடனே தனது ஜாகீர்தார் வெங்கோஜியைத் தஞ்சைமீது படையெடுத்துப் போய் அழகிரியை வென்று நாட்டை மீட்டுச் செங்கமலத் திடம் ஒப்புவிக்கும்படி உத்தரவிட்டான். செங்கமலம் வெங்கோஜியின் படையுடன் தஞ்சையைக் கைப்பற்ற வரு கிறன் என்பதையுணர்ந்த அழகிரி, கோட்டையைத் தாக்கக் காலம் கிட்டும்வரை பக்கத்திலுள்ள காடுகளில் பதுங்கி யிருந்தனன். சுமார் எட்டு வருஷகாலமாகச் சொக்க நாத னுக்கு அடங்கிய பிரதிநிதியாகிய அழகிரி சுவாதீனம் பாராட் ட ஆரம்பித்தான். இது காரணத்தால் சொக்கநாதனுக்கும் அழகிரிக்கும் பகை அதிகப்பட்டதாகவே, இவர்கள் இரு வரையும் தனித்தனி வெல்வது இலகுவான காரியமாகக் காணப்பட்டது. 1676ல் வெங்கோஜி திடீரென்று தஞ்சை யைத் தாக்கிக் கோட்டையை கைப்பற்றிக் கொண்டதும்

* காதலியும் செங்கமலமும் உயிர்தப்புவிக்கப் பெற்றார்க ளென்று நவீன, நாடக நூல்கள் தெரிவிக்கின்றன.

திருச்சிக்கோட்டையையும் முற்றுகையிடலானான். ஆனால் அதைக் கைப்பற்ற முடியாமல் பக்கத்திலுள்ள கோட்டை கொத்தளங்களை யெல்லாம் கைவசப்படுத்தித் தஞ்சை சென்று தானே தலைவனாகி ஆண்டுவரலானான். மதுரை ராச்சியத்திற் பஞ்சமும் தஞ்சை ராஜ்யத்திற் செழிப்பும் விளங்கின. இதல்காள், வெங்கோஜி செய்கையில் வெறுப் படைந்து அவனுக்குப் புத்திகொடுக்கும் நோக்கத்துடன் தெற்கே படை யெடுத்து வருவதாக வதந்தியுண்டான பொழுது, சொக்கநாதன் சுவாதீனமடைந்து யுத்தசந்நத்தனானான். மைசூர் அரசனும் மதுரை மீது படையெடுக்கத் தயாராக விளங்கினான். இத்தகைய குழப்பங்களுக் கிடையே 1677ல் மகாராஷ்டிர மன்னன் சிவாஜி தெற்கே படையெடுத்துச் செஞ்சி முதலிய கோட்டைகளைக் கைவசப்படுத்திக்கொண்டு, தஞ்சை வந்ததும், தன் சகோதரன் வெங்கோஜியைத் தன்னைக்கண்டுபோகும்படி சொல்லியனுப்பி அவன் வந்ததும் சிறைப்படுத்தி வைத்தான். ஆனால் வெங்கோஜி தப்பி ஓடிவிடவே, தான் வடக்கே முகலாயர் சேனையைத் தாக்குவதினிமித்தம்புறப்பட்டுப்போவதன்முன் தனது தம்பி சந்தோஜியிடம் தஞ்சை நாட்டையும் சைனியத்தையும் ஒப்புவித்துப் போனான். வெங்கோஜிக்கும் சந்தோஜிக்கும் சண்டை நடந்ததில், சந்தோஜியே சாமர்த்தியமாக வெற்றியடைந்தனன். சொக்கநாதனும் தஞ்சையைத்தாக்கி ஜெயிக்க நினைத்துப் படையெடுத்தது பயனற்றதாயிற்று. பின்னர் சொக்கநாதன் அரசாங்கக்காரியங்களைக் கவனிக்காது வேறு விநோதங்களில் ஈடுபட்டிருந்தகாலத்தில், முத்துலிங்கநாயக்கன் பட்டத்திலிருந்து ஆளநேர்ந்ததென்றும், ஆனால் சிறிது நாளில் முத்துலிங்கன் தள்ளப்பட்டுச் சொக்கநாதன்பழைய

படி ஆண்டு வரலானன் என்றும்,இதன்மேல் முத்துலிங்கன் ரஸ்தம்கான் என்ற முகமதிய வீரன் துணைபெற்றுத் திருச்சியைக் கைவசப்படுத்தினன் என்றும், ரஸ்தம்கான் முத்துலிங்கனைச் சிறைப்படுத்திவைத்துத் தானே சர்வாதிகாரியாகி இரண்டு வருஷம் கொடுமையாக ஆண்டு வந்தானென்றும் 1680ல் மைசூர் சேனைத் தலைவன் குமாரையன் திருச்சியை முற்றுகையிடச் சொக்கநாதன் முதலானவர்கள் ரஸ்தம்கானையும் அவன் ஆட்களையும் நாசம் செய்தார்கள் என்றும் தெரிகிறது. இச்சமயம் தனக்கு உதவிபுரிந்த கிழவன்சேதுபதிக்குப்பாராஜகேஸரிஎன்ற பட்டத்தைக்கொடுத்ததுடன் இராமநாதபுரம் தளவாயாகக் குமாரபிள்ளையையும் அனுப்பிச் சிறப்பித்தான்.1682ல் மைசூர்ச்சேனை திருச்சியைச் சூழ்ந்து கொள்ள, சொக்கநாதனுக்கு உதவி புரிய வந்த மறவர்கள் கொள்ளையடிக்கவும் துரோகம் புரியவும் ஆரம்பித்தார்கள். செஞ்சித்தலைவன் அரசுமலையும், வெங்கோஜியும் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மைசூர்ச்சேனைத்தலைவன், அரசுமலையால் கைதிசெய்யப்பட்டதும், மைசூர்ப் படைகள் ஓடிவிடவே, கோட்டைகள் அரசுமலை வசமாயின. தனக்கு விரோதமாகக் கிளம்பியதையும், நாடுகளும் சேனைகளும் தன்னைவிட்டுப் போயினமையையும் அறிந்துவருந்திய சொக்கநாதனுக்கு வெந்த புண்ணிற் கோலிட்டதுபோல் சாம்பாஜியும் திருச்சியை முற்றுகையிடலானன். இவ்விதக் கொடுமையான நிலைமை தனக்கும் தன் நாட்டிற்கும் ஏற்படலாயிற்றே என்ற வருத்தத்தை மிகுதியாகக் கொண்ட சொக்கநாதன் 1682ல் காலஞ்சென்றனன்.

தந்தை இறந்ததும் 16–வயதுடைய ஸ்ரீரங்ககிருஷ்ண முத்து வீரப்பநாயக்கன் பட்டம் எய்திச் சகல விஷயங்களை

யும் தானே நேரிற் கவனித்து ஒழுங்குசெய்ய முற்பட்டான். நாலைந்து வருஷங்களில் இழந்த ராச்சியங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டதுடன், பிற நாட்டரசர்களையும் நண்பர்களாகவும் செய்து கொண்டான். கலகமில்லாது சமாதானம் நிலைக்கவே, குடிகளும் கவலையொழிந்து சுகவாழ்வினர்களாயிருந்தார்கள். இக்காலத்தில் பேரரசனுகிய மூகலாய சக்ரவர்த்தியால் சிற்றரசர்களின் மரியாதை பெற்றுவரும்பொருட்டு அனுப்பப்பட்டு வந்த சக்கரவர்த்தியின் செருப்பு தன்இடம்வந்த பொழுது அதைச்சாமர்த்தியமாகப்பெற்றுத் தன் காலில் அணிந்து கொண்டு வந்தவர்களை அவமரியாதை செய்தனுப்பும் தீரனுகவும் விளங்கினுன். 1686ல் தளவாய் வேங்கட கிருஷ்ணப்பனும், கிழவன் சேதுபதியும் முத்து வீரப்பனுக்கு விரோதமாகக் கலகஞ் செய்ய எத்தனித்த பொழுது, தன் தகப்பனுரால் தளவாயாக அனுப்பப்பட்ட தளவாய் குமாரபிள்ளை அவ்விருவரையும் பிடித்து அரசனிடம் அனுப்ப எத்தனித்தார். இதையறிந்த கிழவன் சேதுபதி, குமாரபிள்ளையைக் கழுவேற்றி அவன்குடும்பத்தையும் தொந்தரவு படுத்தினுன். பின், வேங்கட கிருஷ்ணப்பன் கிழவன் சேதுபதி ஆகியஇருவரும் தஞ்சைச் செங்கமலநாயனுக்கனுடன் மதுரைமீதுபடையெடுத்துவந்தபொழுது, சமாதான வாழ்க்கையை நிலைநிறுத்த விரும்பியவனுன முத்துவீரப்பன் அவர்களுடன் சண்டைசெய்து கேட்டை யுண்டாக்குவதினும் சமாதானத்துடனிருப்பது நன்றென்று சமாதானஞ் செய்து கொண்டான். நாட்டிலுள்ளவர்களுக்கு நன்மையாக விளங்கிய முத்துவீரப்பன் 1688ல் அம்மைநோய்வாய்ப்பட்டு அகாலமரணத்துக்கு உள்ளானுன். இவனது ஏகபத்தினியாகிய முத்தம்மாள் 'காதலர்இறப்பின்கனைஎரிபொத்தி'

ஊதுலக்குருகின் உயிர்த்துஅகத்தடங்காது,இன்னுயிர்ஈவர் ஈயாராயின், நன்னீர்ப் பொய்கையின் நளியெரிபுகுவர், நளி யெரிபுகாராயின், அன்பரோடு உடன் உறை வாழ்க்கைக்கு நோற்று உடம்படுவர் என்ற பத்தினிப்பெண்டிர் செய்கை யில் முதன்மையான உடன்கட்டை ஏறத் துணிந்து நின்ற னள். ஆனல் அப்பொழுது கருப்பமுற்றவளாயிருந்தபடி யால், உடனிருந்தவர்கள் குழந்தையை உத்தேசித்து இப் பொழுது செய்யவேண்டாமென்று தடுக்கவே, இணங்கியிரு ந்த முத்தம்மாள், 1689ல் ஆண்குழந்தையைப்பெற்ற நான் காம் நாளே தனது கணவனிடத்துக் கொண்டுள்ள அன்பு விளங்க ஒருவருக்கும் தெரியாமல் பனிநீரைக் குடித்து ஜன்னிகண்டு உயிர்துறந்தாள். இவள் பெற்றமகன் முத்து விஜயரங்கச்சொக்கநாதனுக்குப் பிறந்த மூன்றுமாதத்திலே யே பட்டம் கட்டப்பட்டது. பட்டத்துக்குக் குழந்தையை யாவது பெற்றிருக்கும் பாக்கியமுற்ற பாட்டியார் ஸ்ரீமங்கம் மகாரு அவர்களே அரசாங்க காரியங்கள் யாவற்றையும் பிரதிநிதியாகவிருந்து பார்க்கும்படியாயிற்று. அம்மையாகிய அனல்நோயால் இறந்த தன்கணவன் முத்துவீரப்பனின் நன் னிலைகருதி முத்தம்மாள் ஸ்ரீமீனுட்சிசுந்தரேஸ்வராலயத்தில் நெய்யபிஷேகக் கட்டளையொன்றும் ஏற்படுத்தியுள்ளார் என்றும் தெரிகிறது. இத்தகைய உத்தமபத்தினி முத்தம்மா ளுக்குப் புதல்வனுகத் தோன்றிய ஸ்ரீமுத்து விஜயரங்கச் சொக்கநாதநாயக்கனுக்குப் பிரதிநிதியாக 1689-முதல் 1705 வரை ஆண்டமகாராணி மங்கம்மாளின் ஆட்சிமுறை முதலிய வற்றை மூன்றும் அதிகாரத்தில் காண்போம்.

# மூன்றாம் அதிகாரம்.

## மகாராணி மங்கம்மாள்.

சென்ற இரண்டு அதிகாரங்களிலும் பழம்பதியாகிய பாண்டியநாட்டின் பெருமை, அதனை ஆண்டுவந்த பலவகை அரசர்கள்முறைமை, பாண்டிய நாட்டில் விஜயநகரப் பிரதிநிதிகளாக நாயக்கமன்னர்கள் ஆண்டுவந்தவிவரம்முதலியவை சரித்திரத்தொடர்ச்சியாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்டுள்ளன. இங்ஙனம்முன்வரலாறு தெளிவாக உணர்ந்துகொள்ளப்பட்டால்தான் நமது மகாராணிமங்கம்மாளின் ஆட்சித்திறமை, நியாயம் முதலியவற்றின் சிறப்பு விளங்கும். இந்த நாட்டை, முன்னர் மலயத்துவஜ பாண்டியன் மகளாகத் தோன்றிய உமையாகும நங்கை தடாதகைப்பிராட்டி கன்னியாயிருந்து ஆண்டவிவரம் புராணத்திற் கூறப்பட்டுள்ளது. இத்தகைய நாட்டை ஆண்ட பாண்டியன் மகளுக்குப் பின் ஆண்ட பெண்மணிகள் இருவர். இவ்விருவரும் கைம்மை நோன்பு நோற்றுவருங்காலத்திலேயே நாட்டையும் ஆண்டுவரக் கூடியவர்களானார்கள். நம்மை இப்பொழுது ஆண்டுவருகின்ற பிரிட்டிஷ் மன்னர் வம்சத்திலும், 1558-முதல் 1603-வரை எலிஸபெத் மகாராணி என்னும் கன்னியும் 1837 முதல் 1901-வரை மாட்சிமிக்க விக்டோரியா மகாராணியாரவர்களும் ஆண்டு புகழ்நாட்டியுள்ளார்கள். இதனால் பெண்களும் பூபாலனம் பண்ணும் ஆற்றல் உடையவர்கள் என்பது விளங்குகிறது. நமது நாட்டுப் பொது மக்களுக்கு மங்கம்மாள் பெயர் தெரிந்திருப்பதுபோல் மற்றைய பெண்ணரசிகளின் பெயர்கள் அவ்வளவு தெரிந்திருக்க இடமில்லை

எங்கும் தனது புகழ்நிலாப் பரப்பிய துங்கமதியினளாகிய மங்கம்மாளின் பெருமையைப்பின்னர்க்கூறப்படும் விவரங்களால் நன்கறிந்துகொள்ளலாம்.

நாட்டைப்பரிபாலனம் பண்ண முற்பட்டதும், நாட்டில் இதற்கு முன்தனது நாயக்கர் காலத்தில் ஏற்பட்ட கலகங்களாலும் கொள்ளையாலும் கெட்டழிந்த பிரதேசங்களைச் செம்மைப்படுத்த முற்பட்டனள். காடொடுகாடாய் ஜனங்களின் போக்குவரவுக்குச் சௌகரியமில்லா மற்கிடந்தபெரும் பாதைகளையும் செப்பனிடுவித்தனள். இராமேஸ்வரம் ஸ்ரீரங்கம் கன்னியாகுமரி இப்புண்ய தலங்களுக்கு யாத்திரைபோகும் புண்ணியர்களுக்குப் பாதைகளில் நிழல் ஏற்படும்படி ஆல், அத்தி, வேம்பு, புளி, பூவரசு, போன்ற நிழல் தருவிருக்ஷங்களை வைத்து உற்பத்தி செய்வித்தனள். பாதைகளில் பிரயாணஞ் செய்வோர்க்குத் தாகசாந்திக்காகநன்னீர்க்கிணறுகளும், குளங்களும் வெட்டுவித்தனள். இடையிடையே தண்ணீர்ப்பந்தல்களும், சத்திரம் சாவடிகளும் கட்டுவித்துத் தருமம் நடந்துவர ஏற்பாடு செய்தனள். தற்காலம் நூதனமாக விளங்கும் புகைரதத்தொடர், மோட்டார் முதலியபிரயாண வசதிகள் ஏற்படாக்காலத்தில் பிரயாணிகள் யாவரும் மேற்குறித்த பாதைகளின்மூலமாக யாத்திரை செய்யவேண்டியவர்களாயிருந்தார்கள். ஆதலால் அத்தகைய ரஸ்தாக்களும் அடிக்கடி செப்பனிட்டு நல்ல நிலைமையில் வைக்கப்பட்டிருந்தன. இருப்புப்பாதைப் போக்கு வரவு மிகுந்தது முதல் அப்பாதையில் யாத்திரை செய்வோரும் இல்லாதவராகவே, அப்பாதைகளில் பல பாழடைந்து கிடக்கின்றன. இப்படிப் பட்ட மரத்துடனும், பாழடைந்த பாதைகளுட

னும் காணப்படும் பழஞ்சாலைகளை இராமேஸ்வரம்கன்னியா குமரிக்குப் போய் வந்தவர்கள் நன்கு கண்டிருப்பார்கள். பாண்டியநாட்டின் பண்டைத்தலைநகரும் இன்றும் இம்மாகாணத்தில் இரண்டாவது பெருநகருமான மதுரைக்கு வந்திறங்கும் எவரும் தாம் இறங்கியதும் தங்கியிருக்கச் சௌகரிய ஸ்தலமாகக் கொண்டிருப்பது, மதுரை ஜங்ஷன்ஸ்டேஷனுக்குக் கிழக்கே அமைந்திருக்கும் மங்கமாள் சத்திரமே. இது இராமேஸ்வரம் போகும் பிரயாணிகள் தங்குவதற்காகக் கட்டப்பட்டது, என்று காணப்படுகிறது. இக்காலத்தில் இச்சத்திரம் ஜில்லாபோர்டு என்னும் நாட்டாண்மைக்கழகத்தாரால் சிறிது பெருக்கிக் கட்டப்பட்டுள்ளது. இந்நகரில், அந்திக்கடைப் பொட்டலுக்கு வடபக்கத்திலிருக்கும்மத்திய மார்க்கட்டும், துரைத்தனப் பெண்பாடசாலைக் கட்டிடமும், தபால் இலாகாச்சூப்ரெண்டு ஆபீசும், மதுரைக் காலேஜ் ஸ்காட் ஸ்கூலும் அதையடுத்த முனிசிபல் ஆகிளை ஆஸ்பத்திரி இருந்தகட்டிடமும்மங்கம்மாள் அரண்மனையின்பாகங்கள் என்று சொல்லப்படுகின்றன. மதுரைத் தெற்குச் சித்திரை வீதியிலிருக்கும் பழையகலெக்டர்கச்சேரியும் இவ்வம்மையின் அரண்மனை என்று தெரிகிறது. திரிசிரபுரத்திலிருந்து அரசாட்சி செய்து வந்தது காரணமாக, அங்கு தன் நாயகன் சொக்கநாதனல் கட்டப்பட்ட அரண்மனையிலுள்ள பிரசங்கமண்டபம் இவ் வம்மையால் கட்டப்பட்டது. இந்த அரண்மனை திருச்சியில் கோட்டைக்குத் தெற்கில், பின்னர் வந்த நவாப்குடியிருந்த காரணத்தினல் நவாப் அரண்மனை என்ற பெயருடன் விளங்குகிறது. நாட்டிலுள்ள நன்மக்களும், நாட்டிற்கு வரும் புறமக்களும் புகழ்ந்து பேசும் பல வகைத் தருமங்களையும் ஏற்படுத்திய இவ் வம்மையாரின்

பிறப்பு வளர்ப்பு தருமசிந்தை தயாளத்வம் இவற்றைப் பிற விக்குணமாகக் கொள்ளாமற் சிலர் இத்தகைய தருமங்கள், அறிஞர்களால் ஒப்புக்கொள்ளத்தகாத போலிக்காரணங்களால் ஏற்பட்டவை என்பர்.

மதுரை ராச்சியத்தை யாண்டுவந்த் நாயக்கமன்னர்கள் பிறமத விரோதம் பாராட்டாது வந்தது காரணமாக நாட்டிற் கிறிஸ்தவ மதம் பரவலாயிற்றென்ற விவரம் முன்னர்ச் சொல்லப்பட்டுள்ளது. 1691ல் இராமநாதபுரத்தில் மெல்லோ என்ற ரோமன்காதலிக் பாதிரியார் கிழவன் சேதுபதி உத்தரவின்படி தூக்கப்பட இருந்த சமயத்தில் மதுரைத் தளவாய் பாதிரியாரை விடுவிக்கும்படி சேதுபதிக்கு உத்தரவிட்டதும் அவ்வாறே விடுதலை செய்யப்பட்டுள்ளார். மற்றோர் தடவை கிழவன் சேதுபதி வேங்கட கிருஷ்ணப்ப நாயக்கனுடன் சேர்ந்து திருச்சியைக் கொள்ளையடிக்க முற்பட்ட பொழுது சேதுபதி அத்தகைய காரியத்தைச்செய்யக்கூடாதென்று மதுரைத்தளவாய்தெரிவித்ததும் சேதுபதியும் அறிவிப்புக் கிணங்கவே நடந்து கொண்டார். இச் சேதுபதி காலத்தில் நடந்த ஓர் முக்கிய விஷயம் கவனிக்கத் தக்கது 1672ல் மதுரை மிஷன் தலைவராக வந்த ஜீன்ஹெக்டர் டீ பிரிட்டோ என்ற பாதிரியார் தமதுசொந்த நாடாகியபோர்ச்சுகலுக்குப் போய்த் திரும்பியதும் 1691ல் மறவ நாட்டில் கிறிஸ்தவமதத்தைப்பரவச்செய்யும் தீவிரவேலையில்ஈடுபட்டிருந்தார். இவர் சேதுபதி அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு நேர்ந்த உடல்நோயை நிவிர்த்திசெய்தனர். இதில் திருப்தியடைந்த அவன் தன் உயிர் (பிறவி) நோயையும் நீக்கத்தக்கவர் இப்பாதிரியாரென நினைத்துப் பாதிரிமதத்

திற் பிரவேசித்தனர். இங்ஙனம் திரயத்தேவன் கிறிஸ்தவ ஞனதும் தன் மனைவிகளில் ஒருத்தியைத்தவிர மற்றவர்களை விலக்கிவிட்டான். விலக்கப்பட்டவர்களுள் சேதுபதியின் மருமகளும் ஒருத்தி. சேதுபதி ஆத்திரமுற்றுப் பாதிரியைச் சிறைப்படுத்தித் தூக்கிலிட்டுக் கொல்வித்தனர். இத்துடன் நில்லாமல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தவும் கிறிஸ்தவக் கோயில்களை இடித்து விடவும் உத்திரவிட்டனர். இத்தகைய செய்கையைக்குறித்துப் பூச்சே என்னும் பாதிரியார் திருச்சியிலிருந்த தளவாய் நரசப்பையரைக் கண்டுபேசி மகாராணி மங்கம்மாளிடம் தெரிவிக்கச்சொன்னதின்பேரில் மகாராணியும் கிறிஸ்தவர்களை இம்சிக்கக் கூடாது என்றும் சேதுபதிக்குத்தரவிடச் சேதுபதியும் அங்ஙனமே நடந்து கொண்டார். இச்செய்கைகளால் மங்கம்மாள் மதத்துவேஷ மில்லாதவள் என்பதும், குடிகளுக்கு ஏற்பட்ட குறையைத்தீர்க்கும் குணமுள்ளவள் என்பதும், மிகுந்த செல்வாக்கு உடையவள் என்பதும் புலப்படும்.

அரசியல் முறையில் மகாராணி செய்த சாமர்த்தியச் செயல்கள் பின்வருமாறு:—மதுரை ராஜ்யத்துக்குத் திருவாங்கூர் அரசன் கப்பம் கட்டிவந்தான். ஆனல் சொக்கநாதன் காலத்தில் ஏற்பட்டபலவிதக் கலகங்கள் குழப்பங்களை முன்னிட்டுக் கப்பப்பணத்தைச் செலுத்தாது பாக்கி போட்டுவிட்டான். இதனையறிந்த மங்கம்மாள் உடனேதனதுவடுகர் சேனையைத் திருவாங்கூருக்கு அனுப்பிப் பணத்தை வசூலித்துவர ஏற்பாடு செய்தனள். சேனை தென் திருவாங்கூரிலுள்ள தலைநகரான பத்மநாமபுரம்என்ற ஊரை அடைந்ததும், அரசன் பயந்து சைனியத்தை மரியாதையாக வர

வேற்று நட்புப்பாராட்டி வந்தான். இச்சேனையினுதவியால் முதலில் தனக்கு விரோதமாக வேலை செய்த எட்டுவீட்டுப் பிள்ளைமார் என்னும்மந்திரிகளைக் கொல்வித்துப் பின்தந்திரமாக வடுகர் சேனையையும் தாக்கிப் பலரைக் கொல்வித்தனன். இங்ஙனம் தான் அனுப்பிய சேனையை மோசஞ் செய்து அழித்து அவமானப் படுத்தியதைக் கேள்வியுற்ற மங்கம்மாள் உடனே தனது தளவாய் நரசப்பையர்வசம் 1698ல் ஓர் பெரும்படையைத் திருவாங்கூருக்கு அனுப்பி வைத்தனள். நரசப்பையர் திருவாங்கூர் சென்று கடும்போர் புரிந்து வென்று மதுரை ராச்சியத்துக்குச் செல்ல வேண்டிய கப்பப்பணத் தொகையுடனும் வெற்றியுடனும் திருச்சி திரும்பினர். 1700ல் தஞ்சை மகாராட்டிர மன்னனுக்கும் மங்கம்மாளுக்கும் எல்லை விஷயமாகத் தாவா ஏற்பட்டது. நரசப்பையர் தஞ்சையை வெல்லப் படையுடன் காவிரியின் தென்கரையில் தாமதித்திருந்தனர். வடகரையிலிருந்த தஞ்சைப்படை மதுரைப் படையை வளைந்து தாக்க, ஆற்றைத்தாண்டி வந்தது. சமயம்பார்த்திருந்த நரசப்பையர் நேரே தஞ்சையைத் தாக்கப் புறப்பட்டனர். இதனையறிந்ததும், பிரிந்து அக்கரைசென்றிருந்த சைனியம் தஞ்சையைக் காப்பதினிமித்தம் ஆற்றைக் கடந்து வரும் பொழுது,நதியில்வெள்ளம்வந்து பலரைஅடித்துக்கொண்டு போயிற்று. மிகுந்து எதிர்த்தவர்களை நரசப்பையர் தாக்கி நாசஞ்செய்து செயித்தனர். இதற்குள் தஞ்சை மன்னனும் னது மந்திரி வாகோஜிமூலம் சமாதானம் செய்துகொள்ளவே நரசப்பையர் வெற்றியுடன் ஊர் திரும்பினர்.

தஞ்சை மகாராட்டிர மன்னன் தன்னுடன் சமாதானமானதும், மங்கம்மாள் தனது நாட்டிற்கும் தஞ்சைநாட்டிற்

கும் தாராளமாகத்தண்ணீர்வந்துபாசானமாகாதபடி மைசூர் அரசன் காவிரியில் பேரணைகட்டித் தடுத்துக்கொடுக்க முயன்றதைக் கெடுத்துப் பாசன நன்மையைப் பெருக்குவதற்காக 1701ல் மைசூர்மன்னன் மீது படையை அனுப்பத் தயாராயிருந்தனள்.பேர்யுத்தம் நடக்கும் போன்றிருந்தது. ஆனால், கடவுள் இவர்கள் நன்மையைக் கருதிக் காட்டிய கருணைவெள்ளம் காவிரியில் பெருவெள்ளத்தை வரச்செய்து அணையை உடைப்பித்துப் படையெடுத்தலை நிறுத்தும்படி செய்தது.

1702ல் இராமநாதபுரம் கிழவன்சேதுபதி தங்களுக்குச் சகாயமாயில்லாததையுத்தேசித்துஅவனைஅ டக்கும் பொருட்டு தஞ்சைப்படையின் துணைகொண்டு,நரசப்பையர்தலைமையில் மதுரைப்படை அனுப்பப்பட்டது. இராமநாதபுரத்து மறவவீரர்கள் குலாபிமானத்துடனும், ராஜதேசாபிமானத்துடனும் கடும்போர் புரிந்தனர். நரசப்பையர் கொலையுண்டார். தளவாய் கொல்லப்பட்டதும் சைனியம் சிதறுண்டு மதுரைக்குத்திரும்பியது. நாட்டில் பலசிற்றரசரை அடக்கிக் கீழ்ப்படிந்து வரும்படி செய்த தளவாய் காலஞ் சென்றதிற் கவலைப்படாதவர்களில்லை. இத்தளவாய்க்குப் பின் அச்சையா என்பவர் தளவாய் வேலைபார்த்துவந்தார்.

மங்கம்மாளின் மனோ நிலைமையையும் அவள் மாதர்க் கணிகலமாகும் கற்பினைப்பாதுகாத்துப் பெருமைப்படுத்துவதில் எடுத்துக்கொண்ட தீர்க்கவிசாரணை முயற்சி முதலியவற்றையும், தெளிவாய் அறிந்துகொள்ளக் கூடாதவர்கள், மங்கம்மாளின் ஒழுக்கத்தைக் குறைக்கத்தக்க போலி அபவாதங்களைக்கூற முற்படுவர். இம்முறையினர், மங்கம்மாள்

தளவாய் அச்சையனிடத்தில் பிருந்தகாதல் பூண்டு, உயர்தர உடை நகைமுதலியவற்றால் தன்னை அலங்கரித்துக்கொள்ளு மியல்பினளென்றும் இது விஷயம், இவ்வம்மையால் ஸ்ரீமீனா ட்சிசுந்தரேஸ்வரர் ஆலயத்தில் பொற்றாமரைக்கு மேல்பக் கம் சித்திவிநாயகர்கோவிலுக்குத் தென்புறமுள்ள ஊஞ்சல் மண்டபத்துக்கு நேர் கீழ்பக்கம் கட்டப்பட்டுள்ள தீர்த்த வாரி மண்டபத்தில் எழுதப்பட்டிருக்கும் மங்கம்மகாரு தள வாய் முதலியவர்களின் சித்திரங்களால் விளங்கும் என்றும் குறிப்பிடுகின்றார்கள். நாம் பார்த்த அளவில், சுமார் 50- வயதுக்குமேற்பட்ட வயதுள்ள மங்கம்மாகாருவின் உடை யும் ஆபரணச்சிறப்பும் அவள் சுமங்கிலியாயிருந்தகாலத்தில் அணிந்திருக்கக்கூடிய ஆடம்பரத்திற்கு எவ்வளவோ குறை ந்தவை என்றே தெரிகின்றது. மேலும் நாயக்க ஜாதியிற் கைம்பெண்கள் மாங்கலியத்தைத்தவிர்த்து மற்ற நகைகளை யும் உடையையும் தரித்துவரும் இயல்பினர்களாகவே இருக் கின்றார்களென்பதை அறிந்தவர்கள், மங்கம்மாளின் சாதா ரண உடைவகையைச் சந்தேகித்தக்க ஆடம்பரக்குறியாகக் கொள்ளவுமாட்டார்கள். மேற்படி சித்திரத்தில் அபவாதக் காரர்கள் கூறுகின்ற அச்சையன் உருவும் பெயரும் எழுதப் படாமல் தளவாய் இராமய்யர் என்பவர் உருவும் பெயரும் எழுதப்பட்டிருக்கின்றன. மகாராணிமங்கம்மாள் அருகில் பின்னர் நாட்டைக் கைக்கொண்டு ஆளும்பருவம் அடைந்து வரும் ஸ்ரீமுத்துவிஜயரங்கச் சொக்கநாதன் உருவமும் அழ காக வரையப்பட்டுள்ளது. இவ்வுருவம் அநேகமாக மங்கம் மாளின் முகச்சாயலைக் கொண்டிருக்கின்றது. இத்தோற்றம் மங்கம்மாள் குழந்தைபெறாது மலடியாகவிளங்கினாள் என்று எழுதியிருக்கும் நவீனஆசிரியர்கூற்றுக்குக் கூற்றாக(எமனாக)

இருப்பதறிந்து மகிழ்ந்தோம். இந்நவீன ஆசிரியர் ஆகிய மாயூரம்முனிசிப் வேதநாயகம்பிள்ளை அவர்கள் மங்கம்மாள் கற்பரசிகளைக்காத்து நீதிபுரியும் சிறப்பைத் தாம் எழுதிய பிரதாபமுதலியார் சரித்திரத்தில், கற்பலங்காரியின் கதையால் நன்குவிளக்கியுள்ளார். மேலும் இச்சித்திரம், மங்கம்மாள் தனதுபேரன் முத்துவிஜயரங்கச்சொக்கநாதன் பட்டத்தைப்பெற்று ஆளும்பருவம் அடைந்துள்ள பொழுது நாட்டை ஒப்படைக்க மறுத்தமைகாரணமாகச் சிறைபிடப்பட்டு ஆகாரமின்றி இறக்கநேர்ந்தது என்று கூறும் கதைகாரர்கள் கதையையும் பொய்பாக்குவதாம்.

மங்கம்மாள் தனது ஆட்சியின் அந்தியகாலத்தில்செய்து முடித்த ஓர்காரியமானது, அவ்வம்மை நீதிமுறைவழுவாது செங்கோல் செலுத்துவதில் எவ்வளவு சாமர்த்திய முடையவள் என்பதைத் தெரிவிப்பதாம். மதுரையிலும் சோழநாட்டிலும் வடக்கிருந்துவந்த ஸௌராஷ்டிரப் பிராமணர்கள் தங்கள் பூர்வ தேசமாகிய ஸௌராஷ்டிர தேசத்தில் செய்துவந்த ஊர்ணதந்துபட நிர்மாணகிரயவிக்ரயங்களையேசெய்து காலங்கழித்துவருவது யாவரும் அறிந்தவிஷயம். இவர்கள் ஆதியில் மூகமதியப்படையெடுப்புக்குப் பயந்து விந்தியமலைக்குத் தெற்கேயுள்ள தேவகிரியிலும் பின்னர் விஜயநகரத்திலும், அதன் பின்னர் விஜயநகரப் பிரதிநிதிகளாக நாயக்க மன்னர்கள் பாண்டியநாட்டை ஆண்டுவந்தகாலத்தில் பாண்டியநாட்டிலும், அதை அடுத்த நாடுகளிலும் குடியேறிக் கஷ்டமின்றித்தங்கள் கைத்தொழிலை விருத்திசெய்து பிழைத்து வருபவர்கள். பிரிட்டிஷ் அரசாட்சி மதுரை முதலிய பிரதேசங்களுக்கு 1801ல் ஏற்பட்டதுமுதல் நாளதுவரை

மக்கள் தொழில் வியாபாரத்தால் பொருள் சம்பாதித்துக் காலத்துக்கு ஏற்ற கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவருபவர்கள். இவ்வகுப்பார்கள், ஸ்வஸ்தி ஸ்ரீவிஜயாப்யுதசாலிவாகன சகாப்தங்கள் 1627 பார்த்திவ௵ ஆவணிமாதம் பிராமண ஆசாரப்படி உபாகர்மம் செய்தபொழுது, மதுரைக் கோட்டை அதிகாரி ஜோஸ்யம் வேங்கடரங்கய்யர் இவர்களுக்குப் பிராமணாசாரம் கிடையாதென்று பலவந்தமாகப் பதினெட்டு ஸௌராஷ்டிர ஜனங்களைப் பிடித்துத் திரிசிரபுரத்துக்கனுப்பி அடைத்துவைத்திருந்தனர். இதனையறிந்ததும் மகாராணிமங்கம்மாள் எந்தக்காரியத்தையும் விசாரியாது செய்யலாகாது என்று ஸௌராஷ்டிரர்களை விடுவித்துப்பின் வரும் அபயப் பிரதானப்பத்திரிகையை அளித்துள்ளாள் என்று தெரிகிறது.

“பார்த்திவ௵ அற்பசி௴ 18௳ ஸ்ரீமத்ராஜாதிராஜ ராஜ பரமேஸ்வர ராஜமார்த்தாண்ட வீரப்பிரதாப ஸ்ரீவேங்கடபதிதேவமகாராயலய்யா அவர்கள் சந்திரகிரியில் ரத்தின சிம்மாசனரூடராய் ராஜ்யபரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கையில், நமது கமனத்திற்குக்காப்பாற்றிய பாண்டியமண்டலம் மதுரை ஸமஸ்தானத்தில் காஸ்யபகோத்திரம் விஸ்வநாதநாயலைய, திருமலைநாயலைய அவர்களின்பௌத்திராளான ஸ்ரீசொக்கநாத பூபாலஸௌரிபட்ட மஹிஷிகளான ஸ்ரீமங்கம்மாளவர்கள் ஸௌராஷ்டிர தேஸத்தவர்களுக்கு எழுதிக் கொடுத்த அபயப்பிரதானப் பத்திரிகைக்கிரமம் எவ்விதமெனில்:—

“நமது மதுராதிகாரி அவ்விடமிருந்த தங்களவர்களும் பிராமணர் கிருத்யங்கள் செய்கிறார்கள் என்பதைப்பற்றி இவ்விடத்திற்கு அனுப்பியபோது அதைக்கேட்டு நாமும் நம்முடைய பிரதானி காரியஸ்தாளவர்களையும் அனுப்பி ஸ்ரீரங்கஸ்தலத்திலிருக்கும் ஆசார்ய புருஷாள், வித்வாம்ஸாள் தேஸதேஸபூர்வோத்திரங்களறிந்த பெரியோர்களாகிய இவர்களை வரவழைத்து, விசாரித்து வரும்படி சொல்லியபோது அந்தப்பத்ததி கிரமம் ஸாஸ்திரசம்மதமாயும் விசாரித்து

2-21080



இவர்களுக்குப் பிராமணாசாரம் உண்டென்று நிச்சயித்து அம்மாகத்மாக்கள் அங்கீகரித்ததினாலேயும், நமது பூர்வீக காலம் முதற்கொண்டு, நமமுடைய தேசத்திலும் நான்கு தேசத்திலும் அனுஷ்டித்து வருவதையும விசாரித்துக் கொண்டோம். ஆகையால், தாங்கள் யாவரும் தங்கள் பூர்வீகஸ்தாள் நடந்து கொண்ட கிரமமாகவே அனுஷ்டித்துக் கொண்டு நமது தேசத்தில் புத்திர பௌத்திரபாரம்பரியமாக இருக்கவேண்டியது; என்று ராயஸம் கோடீஸ்வரையாவைக் கொண்டு அரண்மனை ததினசரி வெங்கடபதிகையால் எழுதவிக்கப்பட்டுள்ளது".

இச்சாசனத்தினின்றும், ராயஸம் கோடீஸ்வரையர் என்றும், பிரதானி ராகவையா என்றும், மதுராதிகாரிஜோ யம் வேங்கடரங்கய்யர் என்றும் விளங்குகின்றன. மேலும் திருநெல்வேலிச் சேனாபதியாக வடமலையப்ப பிள்ளை விளங்கினாரென்று வேறு ஆதாரத்தால் விளங்குகிறது. தனது நாட்டிலுள்ள குடிகள் யாவரும் தங்கள் தங்களுக்குரிய ஆசாரங்களைக் கைவிடாது கொண்டொழுக நீதிபுரிந்துள்ள மங்கம்மாளின் தண்ணளி, செங்கோல் முறை பிறநாட்டாரைத் தனக்கடங்கி நடக்கச்செய்த திறமை முதலியவை; தமிழ் நாட்டிலுள்ள மக்கள் யாவராலும் எக்காலத்தும் புகழ்ந்து பாராட்டப்படுபவையாம். நாயக்கமன்னர்களில் தலைசிறந்த விஸ்வநாதநாயக்கர் திருமலைநாயக்கர் காலத்தில் எவ்வளவு கீர்த்தியும் புகழும் வளமும் நாட்டில் ஏற்பட்டிருந்தனவோ அவ்வளவுக்குக் குறையாதிலைமை மங்கம்மாள் ஆட்சியிலும் ஏற்பட்டிருந்தது என்போம். முப்பத்திரண்டு தருமங்களில் காலத்துக்கு அவசியமான தருமங்களைச் செய்து தனது முன்னோர்களின் புகழைக் கொள்ளைகொள்ளாநின்ற மகாராணி மங்கம்மாள், 1705ல் திருச்சியில் தனது பேரன் முத்துவிஜயரங்கச் சொக்கநாதநாயக்கனுக்குப் பட்டங்கட்டி வைத்துவிட்டு, மதுரையிலுள்ள தனது அரண்மனையில் தங்கி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரரை மனமொழி மெய்களாகிய திரிகரண சுத்தியுடன் வழிபட்டு, அவ் வருஷ முடிவுக்குள் இறைவனடி சேர்ந்து இன்பம் எய்தினள்.

புதிய முறைப்படி எங்களால் பப்ளிஷ்
பட்ட பாடசாலைக்குரிய தமிழ்ப் புத்த

† நீதிசாரத்திரட்டு
† செய்யுட்பாடக்கோவை முதற்பாகம்
† ஷை 2-ம் பாகம்
† யாக்ஞவல்கியம்
† அற்புதக்கணையாழி
† கங்காபாய் சுயம்வரம்
† துரைத்தன விளக்கப்பாடங்கள் முதற்பாகம்
ஷை 2-ம் பாகம் அச்சில்
மதுரை ஜில்லா பூகோளம்
இராமநாதபுரம் ஜில்லா பூகோளம்
திருநெல்வேலி ஜில்லா பூகோளம்
உலகநீதி நீதிக்கதைகள்
ஆத்திசூடி நீதிக்கதைகள்
கொன்றைவேந்தன் நீதிக்கதைகள்
வெற்றிவேற்கை நீதிக்கதைகள்
மகாராணி மங்கம்மாள் [பாண்டியநாட்டு பழஞ் சரித
ஆராய்ச்சியுடன்]

☞ வித்தியாரத்னாகரம் புதிய தமிழ்க் காப்பிகள்

| | | |
|---|---|---|
| ஷை | கிர். | 1 |
| ஷை | கிர். | 2 |
| ஷை | கிர். | 3 |
| ஷை | கிர். | 4 |
| ஷை | கிர். | 5 |

ஸ்ரீ ஆழ்வார் குலசேகரன்
† பொய்யா மொழிப்புலவர் சரித்திரம்
மானிடப்பிறவி

மேற்கண்ட புக்ஸ்களும் மற்றும் ஸ்கூலுக்கு வேண்டி
புக்ஸ்களும் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும்.

பி. நா. சிதம்பர முதலியார் பிரத
ப்பப்ளிஷர்ஸ் அண்டு புக்ஸெல்லர்ஸ்,

† இக்குறியுள்ளவை துரைத்தனத்தார் அங்கீகரி